விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 06 செவ்வாய்க்கிழமை (22.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 278

## தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளை

# கடுமையாக தாக்கி சிறைபிடித்து வைத்திருந்த சுமணரத்ன தேரர்

## மட்டக்களப்பில் தேரரின் சண்டித்தனம்



(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்களத்தைச் சேர்ந்த மூன்று அதிகாரிகளை மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் கடுமையாகத் தாக்கியதுடன் அவர்களை சிறைபிடித்து வைத்திருந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.**

குறித்த சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மட்டக்களப்பு - செங்கலடி, பன்குடாவெளி பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப் பட்டுள்ள இடத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட தொல் பொருள் திணைக்கள அதிகாரிகளை வருமாறு அழைத்த அம்பிட்டிய சுமணரத்ன தேரர், அங்கு வந்த தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மூவரை கடுமையாக தாக்கி தகரக் கொட்டில் ஒன்றிற்குள் 23

## பேருந்திலிருந்து தவறிவிழுந்த

### 5 மாத குழந்தை காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - நுணாவில் கிழக்குப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை பேருந்தில் தாயுடன் பயணம் செய்த ஐந்து மாத வயது நிரம்பிய ஆண் குழந்தை ஒன்று வீதியில் தவறிவிழுந்து தலையில் காய 23

### ஹெரோயினுடன்

## 18 வயது யுவதி யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொழும்புத் துறைப் பகுதியில் 185 மில்லி கிராம் ஹெரோயினை உடைமையில் வைத்திருந்த 18 வயது யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் 23

## ரயிலில் மோதுண்ட இளைஞன் உயிரிழப்பு

### கிளிநொச்சியில் சம்பவம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ரயிலில் மோதுண்ட நிலை யில் இளைஞரொருவரின் சடலம் மீட்கப்பட் டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்றுக் 23

## தியாக தீபம் திலீபனை நினைவேந்த முடியுமா?

### 24 ஆம் திகதி நீதிமன்றம் அறிவிக்கும்

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபன் நினைவேந்தலுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவதா? அல்லது தொடருவதா? என்பது குறித்து, எதிர்வரும் 24ஆம் திகதி தீர்ப்பளிப்பதாக யாழ்ப்பாண நீதவான் அறிவித்துள்ளார்.

தியாக தீபம் திலீ 23

## கிளிநொச்சியில் பலத்த காற்று

### 33 பேர் பாதிப்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று வீசிய பலத்த காற்றினால் 8 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேர் பாதிக்கப்பட் டுள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளதாக மாவட்ட இடர் முகா 23

## பிரபாகரன் துப்பாக்கியால் செய்யாததை

# 20ஆவது திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிட்டும்

### ஞானசார தேரர் எச்சரிக்கை



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், தன்னுடைய துப்பாக்கியால் செய்து கொள்ள முடியாததை, அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிட்டும். எனவே, 20ஆவது திருத்தச் சட்டமூலம் மிகவும் ஆபத் தானது."

இவ்வாறு பொதுபலசேனா 23

## இந்திய பிரதமர் மோடி பிரதமர் மகிந்தவுடன் சந்திப்பு

### எதிர்வரும் 26ஆம் திகதி தொலைக்காணொலி ஊடாக இடம்பெறும்

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையே எதிர்வரும் 26ஆம் திகதி சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

தொலைகாணொலி ஊடாக இடம்பெறவுள்ள இந்த சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையேயான இரு தரப்பு உறவுகள் மற்றும் 23

### 20ஆவது திருத்தம் பாராளுமன்றில் இன்று சமர்ப்பிப்பு

(கொழும்பு)

20ஆவது திருத்தத்தை இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக அரசாங்கம் உறுதி செய்துள்ளது.

இது குறித்து நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த கல்வி அமைச்சர் 23

### யாழ்., தென்கிழக்கு பல்கலைகளில்

## பகிடிவதையில் ஈடுபட்ட 8 மாணவர்களுக்கு வாழ்நாள் தடை

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில் உள்ள இரு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 8 மாணவர்களுக்கு ஆயுட்காலத் தடை விதிக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

பகிடிவதைச் சம்ப 23

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்





அன்னை மடியில்
16.06.1982
ஆண்டவன் திருவடியில்
22.09.2016

### ஜெயபாலன் சதீஸ்குமார்

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உன் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
மண் விட்டு மறைந்த நீ
விண்ணோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
எம் நெஞ்சமதில்
எப்பொழுதும்
இருக்கிறாயடா குமரா...

(4046)

“ கனகபவன் ”
இணுவில் கிழக்கு,
இணுவில்.

ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்
அப்பா, அம்மா, தங்கை, மைத்துனன்.

## கண்ணீர் அஞ்சலி



என் அன்பின் உடன்பிறவாத் தம்பி

### லயன் P.K பாலசிங்கம் - பாலஸங்கர்

( முகாமைத்துவ உதவியாளர் - பிரதேச செயலகம், உடுவில் ,
முன்னாள் தலைவர், லயன்ஸ் கழகம் - நல்லூர் )

அவர்கள் 20.09.2020 அன்று
காலமான செய்தியறிந்து
ஆழ்ந்த துயர் அடைவதுடன்
அவரின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

க. தவலிங்கம்
( ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம் )

# மரண அறிவித்தல்



## லயன் P.K. பாலசிங்கம் பாலஸங்கர்

( முகாமைத்துவ உதவியாளர் - பிரதேச செயலகம் - உடுவில்,
முன்னாள் தலைவர், லயன்ஸ் கழகம் - நல்லூர் )

இல. 718, “சங்கரியார் வளவு”, சிவலிங்கப்புளியடி, வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லயன் P.K. பாலசிங்கம் பாலஸங்கர் (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், உடுவில் ) நேற்று முன்தினம் (20.09.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற P.K. பாலசிங்கம் “படியாதவன்” (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் - விஞ்ஞானம்) மற்றும் சிவபதிமலர் தம்பதியரின் அன்பு மூத்தமகனும் காலஞ்சென்ற தங்கராசா மற்றும் சந்திராதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் பிரபாலினியின் (உதவி முகாமையாளர், SLT, Jaffna) பாசமிகு கணவரும் பாலரிஷாந் (பழைய மாணவன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2017 A/L, HND in Quantity Surveying ), பாலசிவானுஜன் (பழைய மாணவன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2019 A/L), பாலசுஜித் ( மாணவன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தரம் 9) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலமயூரகனின் (கனடா) அன்புச் சகோதரனும் சோபனாவின் அன்பு மைத்துனரும் கௌசிக், அஸ்வின் (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையும் காலஞ்சென்ற குமாரகுலசிங்கம் - தவமணி, செல்வி யோகேஸ்வரி (ஓய்வுநிலை பிரதி அதிபர்- யாழ். இந்து மகளிர் கல்லூரி), ராஜேஸ்வரி (ஓய்வுநிலை பிரதி அதிபர் - முஸ்லிம் மகா வித்தியாலயம் - வவுனியா ) - சுந்தரநடராஜன் (ஓய்வுநிலை அதிபர்), ரத்தினேஸ்வரி (ஓய்வு நிலை உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - உடுவில்) -காலஞ்சென்ற ஜெயபாலன் ஆகியோரின் பெறாமகனும் தயாளினி, மகேந்திரராஜா (சுவிஸ்), சாலினி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஜெயந்தன் (அதிபர் - வசாவிளான் மத்திய கல்லூரி), ரகுபதி, வளர்மதி (சுவிஸ்) ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும் காலஞ்சென்ற சிவஞானகுரு - புவனேஸ்வரி, காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் காந்திமதி, காலஞ்சென்ற சிவபாலன் (சிறாப்பர்) மற்றும் கனகமணி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2020) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பித்து முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

021 222 3118, 071 430 4761,
00141 68244581 ( சகோதரன் - கனடா )

(4049)

தகவல்: பிரபாலினி (மனைவி ), பாலரிஷாந் (மகன்), பாலசிவானுஜன் (மகன்), பாலசுஜித் (மகன்), பாலமயூரகன் (தம்பி )

# மூத்தகுடி தமிழ்க்குடி

# அன்று பிரபாகரன் கூறியதையே இன்று விக்னேஸ்வரன் கூறினார்



## விளக்கமளிக்கும் மனுஷ



(கொழும்பு)

**விக்னேஸ்வரனின் கருத்துக்களால் மீண்டும் இனங்களுக்கிடையில் பிரிவினை ஏற்பட்டு, அது மீண்டுமொரு யுத்தத்தை தோற்றுவிக்கும் என்பதாலேயே நான் எதிர்ப்பு தெரிவிக்கின்றேன் என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலிலேயே இதனை குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றில் விக்னேஸ்வரன் கூறிய தமிழ் மொழி தொடர்பான வரலாறு குறித்து எனக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை.

நான் இனவாதமற்ற ஒருவராகவே தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுடன் நெருங்கி செயற்படுகின்றேன்.

மக்கள் மத்தியில் நல்லிணக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் விக்னேஸ்வரன் மக்கள் மத்தியிலுள்ள நல்லிணக்கத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலேயே பேசினார்.

இந்த நாட்டின் மூத்த குடிகள் தமிழர் என்றே அவர் கூறினார். இதனையே பிரபாகரன் ஆயுதம் ஏந்தி தங்களுக்கான தாயகமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கோரிக்கையாக முன்வைத்தார்.

அதாவது வேறொரு இராச்சியம் வேண்டுமென்ற கருத்திற்காகவே 30 வருடமாக யுத்தம் செய்து அந்த தனித்தாயக நிலைப்பாட்டை இல்லாது செய்தோம்.

இந்த நிலையில் மீண்டும் அந்த தனித்தாயக நிலைப்பாட்டை பாராளுமன்றத்திற்குள் கொண்டு வந்தமையினாலேயே நான் அதற்கு எதிர்ப்பை தெரிவித்தேன் என அவர் மேலும் தெரிவித்தார். (2-7)

---

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பொறுப்பு மைத்திரியே அவருக்கு எதிராக உடன் சட்ட நடவடிக்கை எடுங்கள்

## ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை உயிர்த்த ஞாயிறு தினம் நடந்த குண்டுத் தாக்குதல் சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய பிரதான நபர் என்ற வகையில் கைது செய்ய வேண்டும் என அரசியல்வாதிகள் பகிரங்கமாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தமது முகநூல் பக்கத்தில் இட்டுள்ள பதிவுகளில் அவர்கள் இதனை வலியுறுத்தியுள்ளனர்.

அதேவேளை கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார, உயிர்த்த ஞாயிறு தின குண்டு தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக்கூறியுள்ளார்.

இந்த நிலையில் உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் சம்பந்தமாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்த பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, தாக்குதல் தொடர்பான பொறுப்பை ஏற்று பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து விலகுமாறு முன்னாள் ஜனாதிபதி, பூஜித ஜயசுந்தரவிடம் கோரியதாக குறிப்பிட்டிருந்தார்.

அப்படி விலகினால், ஆணைக்குழுவில் அறிக்கையை மாற்றி பணி ஓய்வுடன் வெளிநாடு ஒன்றின் தூதுவர் பதவியை வழங்குவதாக முன்னாள் ஜனாதிபதி, பூஜித ஜயசுந்தரவுக்கு அறிவித்திருந்தார் எனவும் ஹேமசிறி பெர்னாண்டோ கூறியிருந்தார்.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர், ஜனாதிபதி ஆணைக்குழுவில் வழங்கிய இந்த சாட்சியம் காரணமாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பெரும் சிக்கலில் மாட்டிக்கொண்டுள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் ஹேமசிறி பெர்னாண்டோ கூறிய விடயங்களை மறுத்து முன்னாள் ஜனாதிபதி நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். (2-7)

---

# தலைவர் பிரபாகரன் இறந்த செய்தி கேட்டு மிகவும் மன வேதனை அடைந்தேன்

## மனம் திறந்த பிள்ளையான்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு யுத்தத்தின் இறுதியில் நடந்தது தொடர்பான செய்தியைக் கேட்ட பின்னர் மிகவும் வேதனையாக இருந்தது என பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

தலைவர் மறைந்த செய்தியை கேட்டதும் மிகவும் கவலையடைந்தேன். மதியம் மற்றும் இரவில் உணவருந்தக் கூட முடியாமல் இருந்தது. இது ஒரு இயல்பான விடயம். என்னதான் எதிரியாக இருந்தாலும் அவர்களது இறப்பில் கவலை கொள்வது சாதாரணமான விடயம். அது இயல்பு.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து கருணா விலகுவதாக அறிவிப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர் என்னை அழைத்துப் பேசியிருந்தார். பிள்ளையான் இப்படி ஒரு முடிவு எடுக்க வேண்டி வரும் போல இருக்கு. நாங்கள் தனியாக இயங்குவது பற்றி யோசிக்கலாம் என தெரிவித்தார்.

நீங்கள் முடிவு எடுத்தால் அதற்கு நான் உடன்படுகின்றேன். ஆனால் அந்த முடிவு ஊடகங்களில் பெரிதாக்கப்பட்டு, நிரந்தரமாக பிரிய வேண்டிய சூழல் ஏற்பட்டால் எல்லாமே முடிந்து போய் விடும். எனவே கவனமாக முடிவெடுங்கள் என நான் தெரிவித்தேன்.

அதன் பின்னர் சில தினங்களில் இயக்கத்தில் இருந்து கருணா பிரிந்து விட்டதாக ஊடகங்களில் பார்த்தவுடன் மிகவும் வேதனையடைந்தேன் என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த முறை நடந்த தேர்தல் மிகவும் முக்கியமான தேர்தல். கடந்த காலங்களில் எனது செயற்பாட்டை மக்கள் நம்பியிருக்கின்றார்கள் என்பதன் வெளிப்பாடே இந்த முறை எனக்கான வெற்றி.

கடந்த காலங்களில் நல்லாட்சி அரசாங்கத்தினால் நான் பழிவாங்கப்பட்டேன். இதனை உறுதியாகக் கூற முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-7)

# கிழக்கு முனையத்தை அரசாங்கமே அபிவிருத்தி செய்யும்

(கொழும்பு)

**கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை பிறிதொரு தரப்பினருக்கு வழங்காமல் அரசுடைமையாக்கி நிர்மாணப் பணிகளை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தேசிய வளங்களைப் பிற நாட்டவர்களுக்கு வழங்குவது இனிவரும் காலங்களில் மட்டுப்படுத்தப்படும் எனக் கப்பற்றுறை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.**



கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் வினவிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் கடந்த அரசாங்கம் செய்யவிருந்த ஒப்பந்தத்தின் ஊடாக முனைய அபிவிருத்தி மற்றும் நிர்வாக பொறுப்பு ஆகியவை இந்தியாவுக்கு வழங்கப்படுமா? அல்லது ஜப்பானுக்கு வழங்கப்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இவ்விவகாரம் இராஜதந்திர மட்டத்தில் பிரதான பேசுபொருளாகவும் காணப்பட்டது.

அம்பாந்தோட்டை துறைமுகம் 99 வருட கால ஒப்பந்த அடிப்படையில் சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டை துறை முகத்தால் எமது நாட்டுக்கு எவ்வித வருமானங்களையும் எம்மால் குறித்த காலப்பகுதிகளுக்குள் பெற்றுக் கொள்ள முடியாது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகளைக் கடந்த அரசாங்கம் அரசியல் பழிவாங்கலுக்காகப் பயன்படுத்திக் கொண்டது. இதன் விளைவை நாடு இன்று எதிர்கொள்கிறது.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை பிறிதொரு நாட்டவர்களுக்கு வழங்குவது அரசாங்கத்தின் நோக்கமல்ல. முனையத்தை அரசுடைமையாக்கி அதன் அபிவிருத்தி மற்றும் பரிபாலன நடவடிக்கைகளை அரச நிறுவனத்தின் ஊடாக முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# இனவாத அரசியலில் ஈடுபட்ட ஹக்கீம்

## குற்றம் சாட்டும் கிரியெல்ல



(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கடந்த பொதுத்தேர்தலில் கண்டி மாவட்டத்தில் இனவாத அடிப்படையில் அரசியலில் ஈடுபட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல குற்றம் சாட்டியுள்ளார்.

ரவூப் ஹக்கீம், ஹலீம் மற்றும் வேலுகுமார் ஆகிய சிறுபான்மை இன வேட்பாளர்கள் இருவரை இணைத்து கொண்டு ஒன்றாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதனடிப்படையில் கண்டி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்திக்கான நான்கு பாராளுமன்ற ஆசனங்களில் மூன்று ஆசனங்கள் அவர்களுக்கு கிடைத்தது.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடும் போது சஜித் பிரேமதாஸவுக்கு கிடைத்த வாக்குகளில் ஒரு இலட்சத்து 83 ஆயிரம் வாக்குகள் இம்முறை பொதுத் தேர்தலில் கிடைக்கவில்லை.

இந்த வாக்குகளில் பெரும்பான்மையான வாக்குகள் சிங்களவர்களின் வாக்குகள் எனவும் கிரியெல்ல சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-4)

# வைத்தியசாலையில் கைதி மரணம்

(கொழும்பு)

களுத்துறை - ஜாவத்த சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதியொருவர் நாகொட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளாரென பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி கைதி சட்டவிரோத மதுபான உற்பத்தியுடன் தொடர்புடைய சம்பவம் தொடர்பில் கடந்த ஜனவரி மாதம் 7 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து அவருக்குத் திடீர் சுகவீனம் ஏற்படவே அவரை நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் களுத்துறை வடக்குப் பொலிஸார் மற்றும் நாகொட வைத்தியசாலைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-4)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் படுகொலை

(கொழும்பு)

பிட்டபெத்தர பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரவு இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த நபர் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளார்.

34 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-4)

# விசேட சுற்றிவளைப்பு; 1,113 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 1,113 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுள் 685 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனைய 428 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# நூறு அடி நீளமான மதில் முழுமையாக சேதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -தனங்கிளப்பு ஜே/299 கிராம உத்தியோகத்தர் பிரிவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வீசிய கடுமையான காற்று காரணமாக வீடொன்றின் மதில் முழுமையாக விழுந்து சேதமடைந்துள்ளது.

தனங்கிளப்பைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி ஜெயச்சந்திரா என்பவரது நூறு அடி நீளமான மதிலே இவ்வாறு விழுந்து முழுமையாக சேதமடைந்துள்ளது. (ஐ-5-30)







வலி.தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட சுன்னாகம் பருத்திக்கலட்டி முதலாம் குறுக்க வீதி, பருத்திக்கலட்டி 2 ஆம் குறுக்க வீதி ஆகிய வீதிகள் புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் மக்கள் பாவனைக்கு திறந்துவிடப்பட்டன. வலிகாமம் தெற்குப் பிரதேசசபை உறுப்பினர் பாலசிங்கம் சுரேஸ்குமார் குறித்த வீதிகளைத் திறந்து வைத்தனர். (படங்கள்:- செ. ரவிசாந்)

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட மஞ்சளை மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டிற்கு சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட மஞ்சளை மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கைத்தொழில் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

நாட்டில் மஞ்சள் இறக்குமதி தடை செய்யப்பட்ட காலப் பகுதியில் சட்டவிரோதமாக துறைமுகத்தினூடாக கொண்டு வரப்பட்ட மஞ்சளை அரசுடைமையாக்குவது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்து இறுதித்தீர்மானமொன்றை எடுக்கவுள்ளதாக தெரிவித்தார்.

அத்துடன் தற்போது அமைச்சினூடாக மஞ்சள் உற்பத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இந்த போகத்தில் போதியளவு மஞ்சளை உற்பத்தி செய்ய முடியாமல் போனாலும் அடுத்த போகத்தில் நாட்டின் நுகர்வுக்கு தேவையான அளவு மஞ்சளை உற்பத்தி செய்யவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மஞ்சள் விளைச்சலை நாட்டில் அதிகரிக்கும் நோக்கில் செடிகளை நாட்டிற்கு இறக்குமதி செய்ய எதிர்பார்ப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# சஜித் பிரேமதாஸ பக்கம் தாவிய மகிந்த-ரணில் ஆதரவாளர்கள்




(கொழும்பு)

சஜித் பிரேமதாஸவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் மகிந்த மற்றும் ரணிலின் தீவிர ஆதரவாளர்கள் மூவர் இணைந்து கொண்டுள்ளனர் என கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்த வகையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினை சேர்ந்த மதுசங்க குறுப்பு ஆராச்சி மற்றும் சந்திம பண்டார ஆகியோர் நேற்று எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்து ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினராவதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் ராஜ்கம பிரதேச சபையின் உறுப்பினர் துலாஜ் தரங்காவும் தனது ஆதரவினைத் தெரிவித்து கட்சியில் இணைந்து கொண்டுள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-4)




சுன்னாகம் பொதுநூலகத்தின் விரிவாக்கல் சேவையின் ஒருகட்டமாக "நூல் கொடுப்போம் நூலகம் அமைப்போம்" எனும் தொனிப்பொருளிலான வாசிப்புக் கூட அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இணுவிலில் அமைந்துள்ள மைக்லி யொட் தனியார் வைத்தியசாலையில் இடம்பெற்றது. (படங்கள் :-செ.ரவிசாந்)









யாழ்ப்பாணம் - நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) தேர்த் திருவிழா நேற்றுக் காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# சைவப்புலவர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கொரோனா அச்சம் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப்புலவர் மற்றும்சைவப்புலவர்பரீட்சைகள்எதிர்வரும்30.10.2020, 31.10.2020 மற்றும் 01.11.2020 ஆகிய திகதிகளில் இடம்பெறவுள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (5)

# விவசாயிகளுக்கு இலவச உரம்

## அங்கஜன் உறுதி



(யாழ்ப்பாணம்)

சுபீட்சத்தின் நோக்கில் கமத்தொழில் மறுமலர்ச்சி எனும் திட்டத்தின் ஊடாக இம்முறை பெரும்போக நெற்செய்கைக்குரிய உரத்தினை இலவசமாக கமநல சேவை நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியுமென யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேட்டு நிலப் பயிர்களுக்கு மானிய அடிப்படையில் (ரூபாய் ஆயிரத்து 500 இற்கு) தேவையான அளவு உரம் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மறவன் புலோவில் இடம்பெற்ற கமக்கார அமைப்பு அலுவலகம் மற்றும் அதனோடு இணைந்த உரக் களஞ்சியத்தை மக்கள் மயப் படுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விவசாயத்துறையில் நாடு முன்னேற்றம் அடைய வேண்டும் எனச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்.

விவசாயிகளின் குடும்பங்களும் அவர்களது சமூகங்களும் நாட்டின் முன்னேற்றகரமான நிலைக்கு வரவேண்டும் என்பதே ஜனாதிபதியின் நோக்கு.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வருகை தந்த விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே சுபீட்சத்தின் நோக்கில் கமத்தொழில் மறுமலர்ச்சி எனும் திட்டத்தின் ஊடாகப் பல விவசாய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இவை விவசாய பெருமக்களுக்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதங்கள் ஆகும். புதிய அரசாங்கத்திடம் எங்களுக்கு தேவையானவற்றை பெற்று பொருளாதார ரீதியில் முன்னேறி செல்வோம். ஒவ்வொரு விவசாயிகளும் மழை, வெயில் பாராது உழைக்கின்றார்கள் என்பதே உண்மையாகும்.

விவசாயிகள் சேற்றில் கால் வைத்தாலே நாம் அனைவரும் சோற்றில் கை வைக்க முடியும் என்பது கூற்று மட்டுமல்ல அதுவே நிதர்சனம் என அவர் தெரிவித்துள்ளார். (5-8-4-30)

# மரிய சேவியர் அடிகளார்க்கு "நாடக கீர்த்தி" விருது



(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் கலை நிறுவனத்தை நிறுவி கடந்த 55 ஆண்டுகளுக்கு மேலாக இடையறாத கலைப்பயணத்தில் பல்வேறுபட்ட சாதனைகளைப் படைத்து வரும் நீ.மரிய சேவியர் அடிகளார் அண்மையில் கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் "நாடக கீர்த்தி" என்னும் முதுகலைஞர் அரச உயர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கைக் கலைக்கழகம், அரச நாடக ஆலோசனைக்குழு ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாடக கீர்த்தி விருதினை பெற்றுக்கொண்ட ஏனைய மூவரும் சகோதர மொழிக்கலைஞர்கள் ஆவர். (5-2)

# தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் - ஐயனார் கோவிலடியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம்தொடர்பில்மேலும் தெரியவருகையில்,

ஒரே குடும்பத்தைச்சேர்ந்த இருவருக்கிடையே இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தையடுத்தே நேற்று முன்தினம் இரவு குறித்த இருவரும்கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (5-8)

# வீதி விளக்குகளை ஒளிர விடுங்கள்

## பொதுமக்கள் வேண்டுகோள்

(குப்பிழான்)

வலி.தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட ஏழாலை கிழக்கு, ஏழாலை மத்தி, ஏழாலை தெற்கு ஆகிய பகுதி வீதிகளில் 15 இற்கும் மேற்பட்ட வீதி மின் விளக்குகள் நீண்ட நாட்களாகப் பழுதடைந்துள்ளமையால் இரவு நேரங்களில் வீதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

இதனால் குறித்த பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களும் வீதியால் பயணிக்கும் பொதுமக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

வலி.தெற்குப் பிரதேச சபையின் முதலாம் வட்டாரத்திற்குட்பட்ட ஏழாலை கிழக்கின் பல பகுதிகளிலும் இரவு நேரங்களில் வீதி விளக்குகள் ஒளிராமை தொடர்பாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே குறித்த வீதிகளில் நீண்டகாலமாகப் பழுதடைந்துள்ள வீதி மின் விளக்குகளை உடனடியாக சீர்செய்ய சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-18)

# அலங்கார உற்சவம்

(குப்பிழான்)

சரித்திரப் பிரசித்தி பெற்ற நாகர் கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

தொடர்ந்தும் 11 தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய அலங்கார உற்சவத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கப்பல் திருவிழாவும் 3 ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத் திருவிழாவும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை கேணித் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (5-4-18)



உடுவில் அகிலன் சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத்தை முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் நேற்று முன்தினம் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

# கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் கடந்த சனிக்கிழமை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 9 பேரும் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

யாழில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்பட்ட 9 பேர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் குறித்த 9 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (5-8)

# நிறுவுநர் தினம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினம் கொவிட் - 19 காரணமாக மிக எளிமையாக இன்று 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சிலை வணக்கம், தூபி வழிபாடு என்பவற்றுடன் நினைவுகூரப்படும். (5)

## பெயர் மாற்றம்

வட்டுக் கிழக்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்ட யசோதரன் சுந்தர்ராம் ஆகிய எனது பெயரை யசோதரன் சுந்தரராம் என மாற்றம் செய்து இன்று முதல் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள: யசோதரன் சுந்தரராம் (4041)


# அமைச்சரவைக் கூட்டம் இனி திங்கட்கிழமையில்



(கொழும்பு)

வாராந்தர அமைச்சரவைக் கூட்டம் இனி திங்கட்கிழமை இடம்பெறும் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆதரவில் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்றதாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நாலக கலுவெவ தெரிவித்துள்ளார்.

அதேநேரம் வாராந்தர அமைச்சரவை அமைச்சர்களின் ஊடகவியலாளர் சந்திப்பு எதிர்காலத்தில் செவ்வாய்க்கிழமைகளில் நடைபெறும்.

இதற்கு முன்னர் அமைச்சரவைக் கூட்டம் புதன்கிழமையும், அமைச்சரவை அமைச்சர்களின் ஊடகவியலாளர் சந்திப்பு வியாழக்கிழமையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி நிறுவுநர் தினமாகிய இன்றைய நாளில் க.பொ.த.(சா/த) 2019 இல் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்லூரியின் புகழை நிலைநாட்டிய மாணவச் செல்வங்கள்



செல்வன். சிவராசா காவியன் (9A)



செல்வி. சதுர்சிகா நித்தியானந்தம் (9A)

Congratulations

ஆகியோரை பாராட்டுவதோடு அவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். (4042)


**பழைய மாணவர் சங்கம் யா/அத்தியார் இந்துக் கல்லூரி.**

# இடிந்து விழுந்த 5 மாடிக் கட்டடம் நிலையற்ற கட்டட அமைப்பாகும்

(கண்டி)

கண்டி-பூவெலிகட பிரதேசத்தில் இடிந்து வீழ்ந்த 5 மாடிக் கட்டடமானது. நிலத்தின் தன்மையைக் கருத்திற் கொள்ளாது நிர்மாணிக்கப்பட்ட நிலையற்ற கட்டட அமைப்பாகும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

குறித்த பகுதியில் அமைந்துள்ள ஐந்து மாடிக் கட்டடமொன்று நேற்று முன்தினம் அதிகாலை இடிந்து விழுந்தது.

குறித்த ஐந்து மாடிக் கட்டடம் தாழிறங்கிய நிலையில், கட்டடத்திற்கு அருகில் உள்ள குடியிருப்பின் மீது விழுந்தமையால் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் குறித்த கட்டடம் நிலத்தின் தன்மையைக் கருத்திற் கொள்ளாது நிர்மாணிக்கப்பட்ட நிலையற்ற கட்டட அமைப்பாகும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் குறித்த கட்டடத்தின் உரிமையாளர்கள் சம்பவ நேரத்திற்கு முன்னதாக அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

இதனை அடுத்து, குறித்த நபர்களுக்கு எதிராக கடுமையான முறையில் சட்டத்தை அமுல்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ஐ-4)



**வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தின் இணையத்தள அறிமுக விழா நிகழ்வு, சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம காலை இடம்பெற்றது. சங்கத்தின் உபதலைவர் செ.சபாநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கணபதிசித்தர் மு.க.கந்தசாமிக்குருக்கள் இணையத்தளத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். அந்தவகையில் www.vavuniyaymha.org என்ற இணையத்தளத்தின் மூலம் சங்கத்தின் செயற்பாடுகளை அனைவரும் அறிந்து கொள்ள முடியும். இதில் விருந்தினர்களாக சிவஸ்ரீ க.கந்தகணேசதாசக் குருக்கள், சங்கச் செயலாளர் தே.அமலன், நகரசபை உறுப்பினர் நா.சேனாதிராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.**

(படம்:- நெளுக்குளம் செய்தியாளர்)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: **175cm**<br>தகைமை/தொழில்: **BBA-NIBM, Cabin Crew (Srilankan Airlines)**<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகமுள்ள பெண். மும்மொழியும் தெரிந்தவர் விரும்பத்தக்கது<br>தொ.இ: **B/11201** | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: 34 செவ் 9 இல்<br>உயரம்: 5'4"த<br>கைமை/தொழில்: பட்டதாரி. மிருக வைத்தியர்.<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர் போன்றோர்<br>தொ.இ: **G/11203** |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: செவ் 10 ல்உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. பிரதி முகாமையாளர் (பஹ்ரைன்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண். உத்தியோகம் விரும்பத்தக்கது.<br>தொ.இ: **B/11202** | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா: 44 ½ சூரி.செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் க.பொ.த.உ.த. கணக்காளர்.<br>எதிர்பார்ப்பு: தனியார். அரச உத்தியோகம் உள்ள மணமகன். மணமகள் விவாகரத்தானவர்.<br>தொ.இ: **G/11207** |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்:விசாகம் 4<br>கி.பா: செவ் 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. தனியார் வேலை<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: **B/11204** | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>கி.பா: செவ் 12 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: உத்தியோகமுள்ள மணமகன்<br>தொ.இ: **G/11209** |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 40 ¾ செவ் 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. கொழும்பில் சொந்தக் கடை<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: **B/11205** | பிறப்பு: 1993 இந்து (சைவபோசனம்)<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: 24 ½ செவ் 11 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: **B.Sc. Software Engineer.**<br>எதிர்பார்ப்பு: **Accountant, Engineer.** சைவபோசனத்தை ஏற்றுக்கொள்ளக் கூடியவரும் ஏற்கப்படும்.<br>தொ.இ: **G/11222** |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.




கிளிநொச்சி முகமாலை தூய ஆரோக்கிய அன்னை ஆலயத்தின் வருடாந்த திருவிழா திருப்பலி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் யாழ்.மறை மாவட்ட ஆயர், ஆலய பங்குத் தந்தை, அருட் சகோதரிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்- கண்டாவளை செய்தியாளர்)

## வீட்டுத் திட்டத்தினை பூரணப்படுத்தி தருமாறு மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் ஜீவநகர் மாதிரிக்கிராம மக்கள் கடந்த ஆண்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தை பூரணப்படுத்த முடியாது பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

ஒட்டுசுட்டான் ஜீவநகர் மாதிரிக் கிராமமக்களுக்கு கடந்த ஆண்டு தேசிய வீடமைப்பு அதிகார சபையினூடாக சஜித் பிரேமதாஸவினால் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது.

இதில் முத்தையன்கட்டு குளம் கிராம அலுவலர் பிரிவில் 20 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ஜீவநகர் மாதிரிக் கிராம வீட்டுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் அவர்களுக்கு கால் ஏக்கர் காணியும் 2 இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட நிலையில் வீடுகளுக்கான மீதிக் கொடுப்பனவு வழங்கப்படாது இவ் வீட்டுத் திட்டம் இடையில் கைவிடப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதியில் வாழும் 20 குடும்பங் களும் தற்போது தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டகைகளில் மிகுந்த சிரமங்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் தமக்குரிய மிகுதிக் கொடுப்பனவுகளை வழங்கி வீட்டுத் திட்டத்தை பூரணப்படுத்த உதவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அரசியல்வாதிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-6)

## பழுதடைந்த மின்குமிழ்களை மாற்றுவதற்கு மின்சாரசபை ஒத்துழைக்க வேண்டும்

(நெளுக்குளம்)

வவுனியா நகர்ப்பகுதியில் பழுதடைந்த மின்குமிழ்களை மாற்றுவதற்கு மின்சாரசபை நகரசபைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வவுனியா நகரசபை உப தலைவர் சு.குமாரசாமி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா நகர்ப்பகுதியில் நகரசபையால் பொருத்தப்பட்டுவரும் மின்குமிழ்கள் மின்சாரசபைக்கு நிதி செலுத்தப்பட்டு மின்சாரசபை ஊழியர் ஊடாக பொருத்தப்பட்டு வந்தன.

எனினும் தற்போது மின்குமிழ் பொருத்தும் பணிக்கு மின்சார சபை தமது ஊழியரை வழங்குவதில்லை.

இந்நிலையில் நகர்ப்பகுதியில் பழுதடைந்த மின்குமிழ்களை மாற்றியமைக்க முடியாதுள்ளதுடன் நகரசபை ஊழியர்கள் மின்குமிழ்களை மாற்ற முடியாது எனவும் மின்சாரசபை தெரிவித்துள்ளது.

இதனால் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட மின்குமிழ்கள் பொருத்த முடியாதுள்ளதாக அவர் தெரிவித்தார். (5-4-299)

## விசுவமடுவில் இஞ்சிச் செய்கை வெற்றி



(தருமபுரம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு பகுதியில் ஒரு விவசாயி பரீட்சாத்தமாக இஞ்சிப் பயிர்ச்செய்கை மேற்கொண்டுள்ளார்.

இச்செய்கைக்கு இயற்கை உரத்தினைப்பயன்படுத்தியுள்ளார். இஞ்சிப் பயிர்ச்செய்கை தற்பொழுது அறுவடைக்குத் தயார் நிலையில்லுள்ளதாகவும் அவ்விவசாயி தெரிவித்தார். அவர் கறுவா உற்பத்தியும் செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (5-4-316)

## உழுந்துச் செய்கையில் கவனம் செலுத்தப்படும்



(நெளுக்குளம்)

வவுனியாவில் உழுந்துப் பயிர்ச்செய்கையை அதிகரிப்பது தொடர்பாக வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபனின் இணைத் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது வவுனியா மாவட்டத்தில் உழுந்துச் செய்கையின் வீழ்ச்சி தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், அதனை அதிகரிப்பதற்கு செய்ய வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆரயப்பட்டது.

அதிகளவான ஏக்கர்களில் உழுந்து உற்பத்தி இடம்பெற்று வந்த வவுனியா வில் தற்போது உழுந்து உற் பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டமை க்கான காரணம் தொடர்பாக ஆளுநரால் கோரப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் காலநிலை மாற்றத்தால் 3000 தொடக்கம் 3500 ஏக்கர் வரையிலான உழுந்து பயிர்ச் செய்கை அழிவடைகிறது. இதனால் விவசாயிகள் உழுந்து செய்கையில் ஈடுபடுவதற்கான ஆர்வம் குறைவடைவதாகவும் அதனால் உற்பத்தி குறைவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் இவ்வருடம் வவுனியா மாவட்டத்தில் 13.500 ஏக்கர் அளவில் உழுந்து செய்கை பண்ணப்படும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் ஒரு கிலோ விதை உழுந்து 830 ரூபாவிற்கு கொள்வனவு செய்து, 850 ரூபாவிற்கு விவசாயிகளிற்கு வழங்குவதாக விவசாயத் திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உழுந்து பயிர்ச்செய்கைக்கு காப்புறுதித் திட்டம் ஒன்றினை அறிமுகப் படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் உற்பத்தி செய்யும் உழுந்திற்கான விலையினை சரியான முறையில் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் இதன்போது தெரிவித்தார். (5-4-299)

## விபத்துக்குள்ளான டிப்பர்



(தர்மபுரம்)

பச்சிளைப்பள்ளி பிரதேசத் திற்குட்பட்ட புதுக்காடு பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து டிப்பர் வாகனம் விபத்துக்குள்ளானது.

நேற்று முன்தினம் புதுகாட்டுப்பகுதியில் டிப்பர் ரக வாகனம் ஒன்று மணல் ஏற்றிக் கொண்டு வந்த போது வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. (5-4-316)



மறவன்புலவு கமக்கார அமைப்பிற்கான அலுவலகம் மற்றும் உரக் களஞ்சியத் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. சீலெக்ஸ் காற்றாலை நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட இக்கட்டடத்தில் திறப்பு விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தென்மராட்சிப் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் சுபச்செல்வன், யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரதி ஆணையாளர் நிசாந்தன், யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி தெய்வநாயகி ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு

24

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**பங்கேற்புடனான வரவு-செலவுத்திட்ட தயாரிப்பில் அரச மற்றும் பகுதி-அரச நிறுவனங்கள், பிரதேச செயலகம், சிவில் சமூகம், பொது மக்கள் தலைவர்கள் மற்றும் வேறு குழுக்கள் ஆகியோரை பங்கு கொள்ளச் செய்ய வேண்டும்.**

### மக்கள் பிரதிநிதிகளது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்

உள்ளூராட்சி மன்றங்களது வருடாந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்படும் போது பொதுமக்களது வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட பொது மக்கள் பிரதிநிதிகளது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதும் ஒரு முக்கிய அம்சமாகும். தொகுதி மட்டத்தில் பெற்றுக்கொள்ளப்படும் ஆலோசனைகள் சபையின் கொள்கை ரீதியாக தீர்மானம் எடுப்பவர்களின் குழுக்களான மக்கள் பிரதிநிதிகளாக முன்வைக்கப்பட்டு அவர்களது கருத்துக்களும் பெறப்படுவதன் ஊடாக வரவு-செலவுத்திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### வரவு-செலவுத் திட்ட கால அட்டவணை

உள்ளூராட்சி மன்றங்களது முகாமைத்துவத்தினை முன்னேற்றுவதற்கு உரியதாக உள்ளூராட்சி மறுசீரமைப்பு தொடர்பான பரிசோதனை ஆணைக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள பின்வரும் வரவு-செலவுத் திட்ட கால அட்டவணைக்கேற்ப, வருடாந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கை ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

### வரவு-செலவுத் திட்ட அறிக்கை ஒழுங்கமைக்கும் படிமுறைகள்

1. ஏப்ரல் 15 - வரவு-செலவுத் திட்ட அறிக்கை தயாரித்தல் தொடர்பான அறிவுறுத்தல்களை ஒழுங்குபடுத்தி வெளியிடலும் பணிக்குழுப் பத்திரம் மூலம் சபையை அறிவூட்டலும். (பொறுப்பு நகர ஆணையாளர் / செயலாளர்)

2. ஜூன் 30 - தொகுதிக் குழுவுக்கு ஆலோசனைகளை முன்வைத்தல். (பொறுப்பு தொகுதிக் குழுக்கள்)

3. ஜூன் 30 - வருமானம் மற்றும் செலவு தொடர்பாக அந்தந்தப் பிரிவுகளின் அறிக்கைகளை முன்வைத்தல். (பொறுப்பு பிரிவுத் தலைவர்களும் விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களும்.)

4. ஜூலை 15 - அடிப்படை மதிப்பீடுகளைத் தயாரித்தல். (பொறுப்பு கணக்காளர்/ கணக்கு பராமரிக்கும் உத்தியோத்தர் /வரவு-செலவுத் திட்ட உத்தியோத்தர்.)

5. ஜூலை31- அடிப்படை மதிப்பீட்டுப் பரிசீலனை மற்றும் நிலையான குழுக்களின் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்ளல்.(பொறுப்பு நகர ஆணையாளர் / செயலாளர்)

6. ஓகஸ்ட்15 - நகர முதல்வர் / தலைவரின் பரிசீலனை. (பொறுப்பு நகர முதல்வர் / தலைவர்)

7. ஓகஸ்ட் 31- வரவு-செலவுத் திட்ட கொள்கைத் தீர்மானமும் சபையில் சமர்ப்பித்தலும் (பொறுப்பு நகர முதல்வர் / தலைவர்)

8. செப்டெம்பர் 30 - பிரிவுகளுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் ஆய்வு செய்தல். (பொறுப்பு பிரிவுத் தலைவர் மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்)

9. ஒக்டோபர் 31 - இறுதி வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் வரவு-செலவுத் திட்ட அறிக்கையை வரைபுபடுத்தல். (பொறுப்பு கணக்காளர்- கணக்குப் பராமரிக்கும் உத்தியோகத்தர் -வரவு-செலவுத் திட்ட உத்தியோகத்தர்)

10. நவம்பர் 15 - நிதி நிலைக் குழுவினால் வரவு-செலவுத் திட்ட வரைவு அறிக்கை கருத்திற் கொள்ளப்படல். (பொறுப்பு நகர ஆணையாளர்-செயலாளர்)

11. நவம்பர் 20 - வரவு-செலவுத் திட்ட செய்தி தயாரிக்கப்படல் மற்றும் வரவு-செலவுத் திட்ட வரைவு அறிக்கை அறிவிக்கப்பட்டு ஆய்வுக்காக வைக்கப்படல் (பொறுப்பு நகர ஆணையாளர்-தலைவர்)

12.நவம்பர் 30 - வரவு-செலவுத் திட்ட வரைவு அறிக்கையை சபையில் சமர்ப்பித்தல். (பொறுப்பு நகர முதல்வர்-தலைவர்)

13.டிசெம்பர்15 - தேவைப்படின் திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட அறிக்கை இரண்டாவது முறையாக சபையில் சமர்ப்பிக்கப்படல். (பொறுப்பு நகர முதல்வர்-தலைவர்)

14. டிசெம்பர்15 - வரவு-செலவுத் திட்ட வரைவு அறிக்கை நிறைவேற்றப்படல். (பொறுப்பு சபை)

15. டிசெம்பர்31 - வரவு-செலவுத் திட்ட அறிக்கை அச்சிடப்பட்டு பகிரப்படல். (பொறுப்பு நகர ஆணையாளர்- செயலாளர்)

**உள்ளூராட்சி நிறுவனங்களில் பிரதான வருமான சேகரிப்பு வழியாகத் திகழ்வது சொத்துவரியாகும். அவ் வரியின் கீழ் ஆதன வரி மற்றும் ஏக்கர் வரி உள்ளடங்குகின்றது. ஆதனவரியை அறவிடுவதற்கு குறித்தவொரு பிரதேசமானது அபிவிருத்தியடைந்த பிரதேசமெனப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்க வேண்டும்.**

### அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்கள்

உள்ளூராட்சி நிறுவனங்களில் பிரதான வருமான சேகரிப்பு வழியாகத் திகழ்வது சொத்து வரியாகும். அவ் வரியின் கீழ் ஆதனவரி மற்றும் ஏக்கர் வரி உள்ளடங்குகின்றது. ஆதனவரியை அறவிடுவதற்கு குறித்தவொரு பிரதேசமானது அபிவிருத்தியடைந்த பிரதேசமெனப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்க வேண்டியதுடன் அது தொடர்பாக பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்தவொரு பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்கான ஆதனவரி விதிப்பதற்கான இயலுமையானது, அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமெனப் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள சொத்துக்களுக்கு மாத்திரமேயாகும். எவ்வாறாயினும், கடந்த காலப்பகுதியினுள் உள்ளூராட்சி நிறுவனங்களினால் வரி விதிக்கப்படல் மற்றும் வருமான முகாமைத்துவம் தொடர்பாக ஆசிய மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட வருமான மதிப்பீட்டு இணைக்கக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட விடயங்களினடிப்படையில், இலங்கையின் அதிகமான பிரதேச சபை ஆளுகைப் பிரதேசங்களில் சனத்தொகை அதிகரிப்பு, கைத்தொழில் மற்றும் வியாபாரத்தை நிறுவுதல் மற்றும் பிரதேச சபைகள் உயரிய மட்டத்தில் சேவைகளை விரிவாக்கல் ஆகிய பல்வேறு விடயங்களினடிப்படையில் துரித வளர்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும் அதற்கிணையாக, அப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாக பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேற்கொண்டு ஆசிய மன்றத்தினால் ஆய்வு செய்யப்பட்டபோது குறித்த ஆளுகைப் பிரதேசத்தை அபிவிருத்தியடைந்த பிரதேசமாகப் பிரகடனப்படுத்த முடியாமைக்கு பின்வரும் விடயங்கள் காரணங்களாக அமைந்துள்ளன என்பது தெளிவாகியுள்ளது.

1. தொடர்புடைய செயற்பாடுகள் பற்றிய தெளிவான புரிந்துணர்வு காணப்படாமை.

2. சொத்து மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தல்.

3. சொத்து மதிப்பீடு மற்றும் திட்டமிடல் தயாரிக்கப்படுகையில் பின்பற்றப்பட வேண்டிய நிலையான அளவுகோல்கள் எவையென சட்டம் அல்லது சுற்றுநிருபம் மூலம் தெளிவுபடுத்தப்படாதிருத்தல்.

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மேலும் இதுபற்றி ஆசிய மன்றத்தினால் வெளியிடப்பட்ட "அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிகள்" நூலில் மிகவும் விவரமாக கூறப்பட்டுள்ளது.

பிரதேச சபைகளுள் இதுவரை அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்படாத நகரமயமாக்கப்பட்ட பிரதேசங்களை பிரதேச சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி. ஆதனவரி வருமானத்தை அதிகரித்துக் கொள்வதன் மூலமாக சுயமாக உருவாகும் வருமானத்தை மேம்படுத்துவதற்காக இவ் வழிகாட்டு நெறியில் காட்டப்பட்டுள்ள அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்கள் பயன்படும்.

### அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (1) ஆம் வாசகம், பொருள்கோடல் கட்டளைச் சட்டத்தின் 17 (1) ஆம் வாசகம் மற்றும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபைகள் (அதனோடிணைந்த) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆம் வாசகத்தின் (1) ஆம் உபவாசகத்தில் இதற்குரிய ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (1) ஆம் வாசகம் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளைக் கூறுகின்றது.**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (1) ஆம் வாசகம்

"உதவி ஆணையாளரின் அனுமதியுடன், அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாகப் பிரதேச சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்தினுள் காணப்படும் குறித்தொரு நிலையான சொத்தொன்றின் அல்லது நிலையான சொத்து வகையொன்றினது ஆண்டுப் பெறுமதியினடிப்படையில் ஆதனவரியொன்று அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ், சகல பிரதேச சபைகளினாலும் விதிக்கப்படவும் மற்றும் அறவிடப்படவும் முடியும்."

அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவதில் பின்பற்றப்பட வேண்டிய படிமுறைகள்.

பிரதேச சபை அதிகார எல்லையினுள் குறிப்பிட்டதொரு பிரதேசமொன்றை அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்படுவதற்கு முன்னர், சபையின் அவதானத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் மற்றும் படிமுறைகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

- அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவதற்கு ஆளுகைப் பிரதேசங்களை அடையாளங் காணல். (பி.ச 134(1))
- உத்தேச பிரதேசங்களின் நில அளவை வரைபடங்களைத் தயாரித்தல் (பி.ச 134(1))
- சொத்து உரிமம் தொடர்பாக அறிக்கை தயாரித்தல் (பி.ச 139(1))
- அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவதற்கான முன்மொழிவினை வரைவு செய்தல் (பி.ச 14(1), 134(1))
- முறையான சபை இணக்கத்தைப் பெற்றுக் கொள்ளல் (பி.ச 14(1), மற்றும் பிரதேச சபைகள் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்)
- உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்திற்காக அனுப்புதல் (பி.ச 134(1))

(தொடரும்...)

## இராசிபலன்

22.09.2020
புரட்டாதி 06, செவ்வாய்க்கிழமை
சஷ்டி பின்னிரவு 3.35 மணிவரை
அனுசம் பின்னிரவு 1.45 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சந்திராஷ்டமம்- அச்சுவினி, பரணி
சஷ்டி விரதம் வளவன்

**மேஷம்** வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், கொடுக்கல்- வாங்கல்க ளில் கவனம் தேவை, ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம்.

**ரிஷபம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் முன் னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பெற்றோர் மீதான பாசம் கூடும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**சிம்மம்** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கன்னி** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ் நிலை உருவாகும், வருமானம் திருப்தி தரும், குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும்.

**துலாம்** விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், உங்கள் பொறுமை க்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறு ப்புக்களும், பதவிகளும் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** விரும்பிய காரியம் விரும்பியபடியே நடை பெறும், பெரிய மனிதர்களின் தொடர்பு கள் அனுகூலம் தரும், வழிபாடு குதூகலம் தரும், போசன சுகமுண்டு.

**தனுசு** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், தொழிலில் எதிர்பாராத இடமாற்றம் இடம்பெறலாம், மனச்சஞ்சலங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**மகரம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதாரமும் கிடைக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், நீண்டநாளைய விருப்பமொன்று நிறைவேறலாம்.

**மீனம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**நீ உன்னைச் சந்திக்கும் நேரம் தான் தியானம்.**

# மின் பாவனையாளர்களுக்காக நடமாடும் சேவை அறிமுகம்

(கொழும்பு)

**மின்சாரத் துறையின் ஒழுங்குறுத்துகை நிறுவனமான இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபை மற்றும் லங்கா தனியார் மின்சார நிறுவனம் பிறைவேட் லிமிடெட் (லெகோ) ஆகியவற்றுடன் இணைந்து மின்சார பாவனையாளர் களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக முதன்முதலாக நாட்டின் மாகாண மட்டத்தில் நடமாடும் சேவையை அறிமுகப்படுத்தியது.**

முதலாவதாக தென்மாகாணத்தில் நடைபெற்ற இந்த சேவையில் 500 க்கும் மேற்பட்ட மின்சார பாவனையாளர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

இந்த நடமாடும் சேவை அனைத்து மாகாணங்களிலும் நடத்தப்படவுள்ளதோடு மின்சார பாவனையாளர்களின் மின்சார முறைப்பாடுகளுக்கு தீர்வையோ அல்லது நடைமுறையையோ வழங்கி, பின்னர், தகவல்கள் தேவைப்படும் பாவனையாளர்களுக்கு ஒழுங்குறுத்துகை கருவிகளைப் பகிரவும். சேவை வழங்குநர்களால் புதிய சேவைகள் அறிமுகப்படுத் தப்படும்.

மேலும், பிரதேச செயலாளர்களின் அதிகாரத்தின் கீழ் உள்ள வழியனுமதி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குதல், புதிய மின்சார இணைப்புகளை வழங்குதல் போன்ற பல சேவைகள் இந்த நடமாடும் சேவையால் வழங்கப்படுகின்றன.

"அரச ஊழியர்கள் மக்கள் இருக்கும் இடத்திற்கே சென்று சேவை செய்ய வேண்டும் என்பது ஜனாதிபதி மற்றும் பிரதமரின் எண்ணக்கருவாகும்.

ஆணைக்குழுவிற்கு 2020 ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரை 865 மின்சாரம் சார்ந்த முறைப்பாடுகள் கிடைக் கப்பெற்றன.

அதேவேளை 2019 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1382 ஆக இருந்தது. 2020 ஜனவரி முதல் செப்டெம்பர் வரை 1244 மின்சார முறைப்பாடுகளை எளிதாக்க முடிந்தது. இந்த முறைப்பாடுகளில் பெரும்பாலானவை வழியனுமதி, மின் கட்டணம், புதிய இணைப்புகள், மின்மானி தொடர்பானதுடன் மின்சார தரம் தொடர்பான பிரச்சினைகள் பற்றியதாகவும் இருந்தன.

மேலதிக தகவல்களுக்கு பெருநிறுவன தொடர்பாடல் பிரிவின் உதவிப்பணிப்பாளர் ஜெயசூரியன் 0762399071 தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக் கப்பட்டுள்ளது. (ஜ-4)

# நாடு திரும்பிய 764 இலங்கையர்கள்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம், அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்து மேலும் 764 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி கட்டார் டோகாவிலிருந்து 39 இலங்கையர்கள் மேலும் டுபாயில் இருந்து 413 இலங்கையர்களும் ஜப்பானின் நரிட்டாவிலிருந்து 18 இலங்கையர்களும் அவுஸ்திரேலியாவின் மெல்பேர்னில் இருந்து 294 இலங்கையர்களும் நேற்று திங்கட்கிழமை காலை நாட்டை வந்தடைந்தனர்.

இவ்வாறு விமான நிலையத்தை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதன் பின்னர், அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (2-7)

# காற்று, மழையுடனான வானிலை மேலும் நீடிக்கும் என எச்சரிக்கை



(கொழும்பு)

நாடு முழுவதும் காணப்படுகின்ற தென்மேற்குப் பருவப் பெயர்ச்சி நிலை காரணமாக நாட்டில் தற்போது காணப்படும் காற்று நிலைமையும் மழையுடனான வானிலையும் மேலும் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று திங்கட்கிழமை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையிலேயே குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மத்திய, சப்ரகமுவ, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்வு கூறியுள்ளது. (2-7)

# வடமாகாண பாடசாலைகளில் இரண்டாம் தேசிய மொழியின் (சிங்களம் - விருப்புப் பாடம்) வளர்ச்சிப் போக்கு



(நேற்றைய தொடர்ச்சி..)

**அட்டவணை 02**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2016 | வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி | 4 | 4 | 4 |
| | | வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | 5 | 5 | 5 |
| | | வ/முஸ்லிம் மகா வித்தியாலயம் | 1 | 1 | 1 |
| | | வ/முதலியார்குளம் றோ.க.த.க. பாடசாலை | 1 | 1 | 1 |
| | | வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | 4 | 4 | 4 |
| | 2017 | வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி | 2 | 2 | 2 |
| | | வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | 8 | 8 | 8 |
| | | வ/முஸ்லிம் மகா வித்தியாலயம் | 1 | 1 | 1 |
| | | வ/இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம் | 1 | 1 | 1 |
| | | வ/பூந்தோட்டம் மகா வித்தியாலயம் | 2 | 2 | 2 |
| | | வ/மூன்று முறிப்பு அ.த.க.பாடசாலை | 2 | 2 | 2 |
| | | வ/கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலயம் | 1 | 1 | 1 |
| | 2018 | வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி | 3 | 3 | 3 |
| | | வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | 7 | 7 | 7 |
| | | வ/முஸ்லிம் மகா வித்தியாலயம் | 2 | 2 | 2 |
| | | வ/மூன்று முறிப்பு அ.த.க.பாடசாலை | 1 | 1 | 1 |
| | | வ/அல்-ஹாமியா மகா வித்தியாலயம் | 1 | 1 | 1 |
| | 2019 | வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி | 10 | 10 | 10 |
| | | வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | 13 | 13 | 13 |
| | | வ/முஸ்லிம் மகா வித்தியாலயம் | 5 | 5 | 5 |
| | | வ/இறம்பைக்குளம் மகளிர்மகா வித்தியாலயம் | 4 | 4 | 4 |
| | | வ/பூந்தோட்டம் மகா வித்தியாலயம் | 2 | 2 | 2 |
| | | வ/மூன்று முறிப்பு அ.த.க.பாடசாலை | 1 | 1 | 1 |
| | | வ/அல்-ஹாமியா மகா வித்தியாலயம் | 1 | 1 | 1 |
| | | வ/கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலயம் | 4 | 4 | 4 |
| | | வ/சீ.சீ.தமிழ் கலவன் பாடசாலை | 2 | 2 | 2 |
| | | மொத்தம் | 145 | 141 | 133 |

எந்த ஒரு மாணவனையும் தொகுதிப் பாடங்களில் குறித்த பாடத்தை தெரிவு செய்ய எவரும் கட்டாயப்படுத்தக் கூடாது. இரண்டாம் தேசிய மொழி சிங்களம் உள்ளடங்குகின்ற குறித்த தொகுதி பாடங்களில் பெரும்பாலானவை மொழி சார்ந்தவையாகும். அவற்றை கற்பிக்க ஆசிரியர்கள் தேவை. ஆனால் போதிய ஆசிரியரின்மை என்பது ஒரு பெரும் குறைபாடாகும். சில தேசியப் பாடசாலைகளில் இரண்டாம் தேசிய மொழி சிங்களத்தை கற்பிக்க மத்திய கல்வி அமைச்சால் ஆசிரியர்கள் வருடாவருடம் நியமிக்கப்படுகின்றனர். அதனால் தேசிய பாடசாலைகளில் சிங்கள மொழியை கற்க விரும்பும் மாணவர்கள் நன்கு பயன் அடைகின்றார்கள். யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வ/முஸ்லிம் மகா வித்தியாலயம் போன்ற தேசிய பாடசாலைகளில் இருந்து ஒவ்வொரு வருடமும் மாணவர்கள் க.பொ.த (சா.த.) பரீட்சைக்குத் தோற்றிக் கொண்டு இருக்கின்றனர். இந்த மூன்று தேசியப் பாடசாலைகளிலும் இரண்டாம் மொழி சிங்களத்தை போதிக்க தேவையான ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். விபரம் பின்வருமாறு. (அட்டவணை 03)

மாகாணப் பாடசாலைகளிலும் இப் பாடத்தை கற்க மாணவர்கள் ஆரம்பித்துள்ளனர். யா/மெதடிஸ்ற் மகளிர் உயர்தரப் பாடசாலை, வ/மங்கையற்கரசி மகளிர் கல்லூரி, மன்/உயிலங்குளம் **R.C.T.M.S.** மன்/அடம்பன் மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் இரண்டாம் தேசிய மொழி சிங்களப் பாடத்திற்கு தோற்றுகின்றனர். இப்பாடசாலைகளிலும் இரண்டாம் தேசிய மொழி சிங்களப் பாடத்தை போதிக்க ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அதேபோன்று ஏனைய சில மாகாணப் பாடசாலைகளிலும் இப் பாடத்தை கற்பிக்க ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். ஆனால் பெரும்பாலான மாணவர்கள் இப்பாடத்தினை விருப்பப்பாடமாக தெரிவு செய்வது குறைவு.

மாகாணப் பாடசாலைகளில் உள்ள நிரந்தர ஆசிரியர் விபரம் பின்வருமாறு. (அட்டவணை 04)

2019 இல் 16 மாகாணப் பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் இப்பாடத்திற்குத் தோற்றி உள்ளனர். இது ஆரம்பமேயாகும். காலப்போக்கில் இம்மொழியை கற்கும் மாணவர் தொகை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு சில மாகாணப் பாடசாலைகளில் இப்பாடத்தை போதிக்க நிரந்தர ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனினும் இவர்களது மொழித் தேர்ச்சி மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நிரந்தர ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளில் கடந்த காலத்தில் பயிற்சி பெற்ற வேறு பாட ஆசிரியர்கள் இப்பாடத்தினை போதிக்கின்றனர்.

**அட்டவணை 03**

| வலயம் | பாடசாலை | நிரந்தரஆசிரியர் தொகை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி | 1 |
| | யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | 3 |
| | யா/திருக்குடும்ப கன்னியர் மடம் மகா வித்தியாலயம் | 2 |
| வலிகாமம் | யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி | 2 |
| வடமராட்சி | யா/நெல்லியடி மத்திய கல்லூரி | 1 |
| தென்மராட்சி | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 1 |
| முல்லைத்தீவு | மு/வித்தியானந்தாக் கல்லூரி | 2 |
| துணுக்காய் | மு/மல்லாவி மத்திய கல்லூரி | 1 |
| மன்னார் | மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி | 2 |
| | மன்/புனித சவேரியார் ஆண்கள் மத்திய மகா வித்தியாலயம் | 2 |
| | மன்/புனித சவேரியார் மகளிர் கல்லூரி | 2 |
| | மன்/அல்-அஸ்கர் மகா வித்தியாலயம் | 1 |
| வவுனியாதெற்கு | வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | 2 |
| | வ/இறம்பைக்குளம் பெண்கள் மகா வித்தியாலயம் | 2 |
| | வ/வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம் | 1 |

**அட்டவணை 04**

| வலயம் | பாடசாலை | நிரந்தரஆசிரியர்தொகை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | ய/புனித திரேசா மகளிர் கல்லூரி | 1 |
| வலிகாமம் | யா/இராமநாதன் மகளிர் கல்லூரி | 1 |
| | யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி | 1 |
| | யா/மகாஜனாக் கல்லூரி | 1 |
| | யா/நடேஸ்வராக் கல்லூரி | 1 |
| | யா/விமங்காமம் மகா வித்தியாலயம் | 1 |
| | யா/காங்கேசன்துறை மகா வித்தியா லயம் | 1 |
| | யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலயம் | 1 |
| | யா/கீரிமலை நகுலேஸ்வரா | 1 |
| | யா/மயிலிட்டி R.C.T.M.S | 1 |

(தொடரும்)

**வீ.இராசையா**
**ஓய்வுநிலை மாகாணக் கல்விப்பணிப்பாளர், வடமாகாணம்.**

# பாரதம்

# மூன்று மாடிக் கட்டடம் இடிந்து விழுந்து;

- 10 பேர் உயிரிழப்பு, பலர் படுகாயம்
- இன்னும் பலர் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என அச்சம்





(மகாராஷ்டிரா)

**மகாராஷ்டிரா மாநிலம் பிவாண்டியில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை மூன்று மாடி கட்டடம் இடிந்து விழுந்ததில் 10 பேர் உயிரிழந்துள்ள அதேநேரம் பலர் படுகாயமடைந்துள்ளனர்.**

குறித்த சம்பவத்தில் காயமடைந்த பலர் அருகில் உள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், சுமார் 25 இற்கும் மேற்பட்டவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருவதுடன் குறித்த கட்டடத் தொகுதி 1984 ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ளதாகவும் இதில் 21 குடியிருப்புகள் இருந்ததாகவும் கூறப்படுகின்றது. (2)

# ஒன்லைன் விளையாட்டுகளால் கடுமையாக பாதிக்கப்படும் குழந்தைகள்

ஒன்லைனில்' குழந்தைகள் அதிக நேரம் விளையாடுவதும் ஆபத்துத்தான். அவை குழந்தைகளை தொடர்ச்சியாக விளையாடவைக்கும். பிரச்சினைக்குரிய பெரியவர்களோடு தொடர்பினை ஏற்படுத்தி புதிய தொந்தரவுகளையும் உருவாக்கும்.


கொரோனா நெருக்கடியால் வீடுகளில் முடங்கிக்கிடக்கும் ஏராளமான சிறுவர்-சிறுமியர்கள் 'மொபைல் போன் கேம்ஸ்' விளையாட்டுகளில் ஈடுபடுகிறார்கள். அதனை நினைத்து பெரும்பாலான பெற்றோர்கள் இப்போது சந்தோசப்படுகிறார்கள்.

'அடிதடி இல்லாமல் அமைதியாக இருந்து பிள்ளைகள் விளையாடுகிறார்கள்' என்று நினைத்து நிம்மதி பெருமூச்சு விடும் பெற்றோர்களால், பள்ளிக்கூடம் திறந்து அவர்கள் பள்ளிக்குச் செல்லும்போதுதான் அந்த விளையாட்டின் விபரீதத்தை உணர்ந்து கொள்ள முடியும். மொபைல் போன் கேம்ஸ், கிட்டத்தட்ட குழந்தைகளின் எதிர்காலத்தை முற்றிலும்தகர்க்கும்விளையாட்டாகும்.

இது போலத்தான் ஒரு முறை, இரண்டு மாத விடுமுறை முடிந்து பள்ளிக்கூடம் திறந்தது. பள்ளி சென்ற சிறுவனால் நோட்டில் எழுத முடியவில்லை.

கை வலித்தது. கண்கள் இருண்டது. சோர்ந்து போய் வீடு திரும்பினான். அவனை வைத்தியரிடம் பெற்றோர் அழைத்துச் சென்றனர். 'இவனால் பேனா பிடிக்க முடியவில்லை. கைவிரல்கள் வலிக்கின்றன என்கிறான். என்ன நோய் என்று கண்டுபிடியுங்கள்' என்று வைத்தியரிடம் கேட்டுக்கொண்டார்கள்.

வைத்தியர் பரிசோதித்துவிட்டு, என்ன நோய் என்று சொன்னதும் பெற்றோர் அதிர்ந்து போய்விட்டார்கள். அந்த நோயின் பெயர் 'வீடியோ கேமேர்ஸ் தம்ப்'! நிரந்தரமாக வீடியோ கேம்ஸ் விளையாடுவதால் பெருவிரல் வீங்கி, நீர் கட்டுடன் காணப்படுவதுதான் இந்த நோயின் அறிகுறி. மகன் கேட்டபோதெல்லாம் அவன் இஷ்டத்திற்கு மொபைல் போனில் போட்டுக்கொடுத்த விளையாட்டுகள் இவ்வளவு பெரிய பிரச்சினையை உண்டு பண்ணும் என்று பெற்றோர்



நினைத்துப் பார்த்திருக்கவில்லை.

விரல் வீக்கம் முதல்- திருட்டு மனோபாவம் வரை பல விபரீதங்கள் இந்த கேம்ஸ்களால் சிறுவர், சிறுமியர்களிடம் ஏற்படுகின்றன. பேருந்துக்கு காத்திருக்கும்போது, படிக்க விருப்பம் இல்லாதபோது, ராத்திரி உறக்கம் வராதபோது... இப்படிப்பட்ட பல நேரங்களில் பொழுது போக்குக்காக ஆரம்பித்த மொபைல்போன் கேம்ஸ்கள் அந்த குழந்தைகளின் எதிர்காலத்தையே சிதறடிக்கிறது.

திருடனை பிடிப்பது-மறைத்து வைத்திருக்கும் வெடிகுண்டுகளை கண்டறிவது-மந்திரவாதிகளை ஒரு கை பார்ப்பது...போன்ற அனைத்து விளையாட்டுகளிலுமே, விளையாடும் குழந்தைகளே 'ஹீரோ' ஆகிக்கொள்கிறார்கள். நண்பர்களோடு சேர்ந்து விளையாடும்போது ஒருவரை ஒருவர் வீழ்த்தப்பார்க்கிறார்கள்.

மேலோட்டமாக பார்க்கும் போது இந்த விளையாட்டுகள் புள்ளிகள் அதிகம் எடுக்கவும், அடுத்த லெவலுக்கு செல்லவும் ஏற்ற பொழுதுபோக்கு என்று சொல்வார்கள். ஆனால் குழந்தைகள் இதில் ஆழ்ந்துவிட்டால் தேவைக்கு அதிகமாக ஆவேசம்காட்டுவார்கள். கேம்ஸின் 'பிரேக் டைம்' நேரத்தில் காத்திருக்க முடியாமல் மொபைலில் திகதியை மாற்றிவிட்டும் 'பேக்' செய்துவிட்டும், பெரும்பாலான குழந்தைகள் அடுத்த விளையாட்டை ஆரம்பித்து விடுகிறார்கள்.

பேருந்திலும் வகுப்பறையிலும், படுக்கை அறையிலும் மறைத்து வைத்து விளையாடும் வசதி மொபைல் போனில் இருக்கிறது. அதனால் அதற்கு அடிமையாகும் வாய்ப்பு அதிகம். கிரிக்கெட், கால்பந்து போன்ற விளையாட்டுகள் அதில் இருந்தாலும் அந்த விளையாட்டுக்கு தேவையான உடல் சக்தியும், மனோபாவமும் மொபைல் கேம்ஸ்க்கு தேவையில்லை. அதனால் அந்த விளையாட்டுகளை விளையாடும் போது உடலுக்கோ, மனதுக்கோ எந்த சக்தியும் கிடைக்கப்போவதில்லை. மாறாக அடிமையாகும் எண்ணம்தான் அதில் அதிகம் வளருகிறது.

குழந்தைகளை மொபைல் கேம்ஸ்களுக்கு அடிமைப்படுத்தும் விதத்தில் தான் ஒவ்வொரு விளையாட்டும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. வெற்றி பெற வேண்டும் என்ற வெறியை உருவாக்கும் விதத்தில் அது உள்ளது. விளையாட்டில் அவர்களுக்கு வெறித்தனம் அதிகரிக்கும்போது படிப்பு உள்பட்ட அவர்களது அன்றாட செயல்கள் அனைத்தையும் அது பாதிக்கும். முழு கவனமும் விளையாட்டை நோக்கி சென்று குழந்தைகளை அடிமையாக்கும் முன்பு அவர்களை காப்பாற்றியாக



# வெளிநாடு

# கொடிய விஷம் தடவிய கடிதம் வெள்ளை மாளிகைக்கு அனுப்பி வைப்பு



(வோஷிங்டன்)

வோஷிங்டன் வெள்ளை மாளிகைக்கு "ரைசின்" என்ற கொடிய விஷப் பொருள் தடவப்பட்ட கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனினும் வெள்ளை மாளிகையை சென்றடைவதற்கு முன்பாகவே, வழமையான சோதனையின்போது அந்தக் கடிதம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக வோஷிங்டனின் பெயரிடப்படாத சட்ட அமுலாக்க அதிகாரிகளை மேற்கோள் காட்டி அமெரிக்க ஊடகங்கள் கடந்த சனிக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளன.

உயிருக்கு அச்சுறுத்தலான "ரைசின்" விஷத்தை அடையாளம் காண கடிதம் மீது இரு சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

பெயரிடப்படாத சட்ட அமுலாக்க அதிகாரியை மேற்கோள் காட்டி, தி நியூயோர்க் டைம்ஸ், அண்மைய நாட்களில் வெள்ளை மாளிகைக்கும் அமெரிக்க மாநில டெக்சாஸில் உள்ள கூட்டாட்சி அமைப்புகளுக்கும் இவ் வாறான கடிதங்கள் அனுப்பப்பட்டதாக சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில் வெள்ளை மாளிகைக்கு அனுப்பப்பட்டுள்ள மேற்படி கடிதம் கனடாவிலிருந்து அனுப்பப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் பெண்ணொருவரை சந்தேக நபராக அடையாளம் கண்டுள்ளதாகவும் புல னாய்வாளர்கள் கூறியுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், மேலும் இதுபோன்ற கடிதங்கள் அஞ்சல் செய்யப்பட்டுள்ளதா? என்று புலனாய்வாளர்கள் ஆராய்ந்து வருவ தாகவும் டைம்ஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது. ரைசின் என்பது ஆமணக்கு விதைகளில் காணப்படும் ஒரு விஷம் என்று அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நிலையங்கள் தனது இணையதளத்தில் பதிவிட்டுள்ளது. (2)

## ஈரான் மீதான ஐ.நா. பொருளாதார தடைகள் அனைத்தும் மீண்டும் அமுல்-அமெரிக்கா அறிவிப்பு



(வோஷிங்டன்)

ஈரான் மீதான ஐ.நா. பொருளாதார தடைகள் அனைத்தும் மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டுள்ள அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மைக் பொம்பியோ, "ஈரான் மீது முன்னர் நிறுத்தப்பட்ட அனைத்து ஐ.நா. பொருளாதாரத் தடைகளையும் மீண்டும் அமல்படுத்துவதை அமெரிக்கா வரவேற்கிறது. ஐ.நா. பாதுகாப்பு சபையில் தீர்மானம் 2231 இன் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈரான் யுரேனியம் செறிவூட்டல் மற்றும் மறுசெயலாக்கம் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான தடை, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை தயாரிப்பது மற்றும் சோதிப்பதற்கான தடை, அணு ஆயுதம் மற்றும் ஏவுகணை தொடர்பான தொழில்நுட்பங்களை மாற்றுவதற்கான தடை போன்ற கட்டுப்பாடுகளும் இதில் அடங்கும்.

அதேபோல் ஏனைய நாடுகள் அணு ஆயுதம் மற்றும் ஏவுகணை தொடர்பான தொழில்நுட்பங்களை ஈரானுடன் பகிர்வதற்கும் தடை விதிக்கப்படுகிறது.

இந்த தடைகளை அமுல்படுத்துவதற்கான கடமைகளை ஐ.நா. உறுப்பு நாடுகள் நிறைவேற்றத் தவறினால் அவற்றுக்கான விளைவுகளை அந்த நாடுகள் சந்திக்கும். ஒரு விரிவான ஒப்பந்தம் எட்டப்படும் வரை அமெரிக்கா ஈரானுக்கு எதிரான அதிகபட்ச அழுத்தத்தை தொடரும்.

எதிர்வரும் நாட்களில் ஐ.நா. பொருளாதார தடைகளை அமுல்படுத்துவதை வலுப்படுத்தவும் அதை மீறுபவர்களை பொறுப்புக்கூற வைக்கும் பல கூடுதல் நடவடிக்கைகளை அமெரிக்கா அறிவிக்கும்" என தெரிவித்துள்ளார்.

ஈரானுக்கும் அமெரிக்கா உள்ளிட்ட 6 வல்லரசு நாடுகளுக்கும், இடையே கடந்த 2015 ஆம் ஆண்டில் அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதில் தங்களது அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதங்கள் தயாரிப்பதற்கானவை இல்லை என ஈரான் உறுதியளிக்க, அதற்கு பிரதிபலனாக அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்டிருந்த ஐ.நா. பொருளாதார தடைகள் அனைத்தும் திரும்பப் பெறப்பட்டது.

எனினும் இந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள நிபந்தனைகளை ஈரான் மீறினால், அந்த நாட்டின் மீது ஐ.நா. தடையை மீண்டும் அமுல்படுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள ஏனைய எந்த நாட்டுக்கும் உரிமை உண்டு என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே அமெரிக்காவில் பராக் ஒபாமா ஜனாதிபதியாக இருந்தபோது கையெழுத்தான இந்த ஒப்பந்தத்தில் பல்வேறு குறைகள் இருப்பதாக கூறி வந்த டொனால்ட் ட்ரம்ப் கடந்த 2018 ஆம் ஆண்டு இந்த அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறுவதாக அறிவித்தார்.

இந்த நிலையில் அணுசக்தி ஒப்பந்தத்தின் மீள் தடை அம்சத்தை பயன்படுத்தி ஈரான் மீது மீண்டும் ஐ.நா. பொருளாதாரத் தடைகளை அமுல்படுத்த அமெரிக்கா தீவிர முயற்சிகளை மேற்கொண்டது.

எனினும் அமெரிக்கா அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து விலகிவிட்டதால், தற்போது அதில் இடம் பெற்றுள்ள மீள் தடை அம்சத்தை பயன்படுத்தி அமெரிக்காவால் ஈரான் மீது தடை விதிக்க முடியாது என்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள ஏனைய நாடுகள் தெரிவிக்கின்றன என்பதும் குறிப்பிடத் தக்கது. (2)


வேண்டும்.

'ஹைப்பர் ஆக்டிவிட்டி' குழந்தைகள் எளிதாக இந்த விளையாட்டுக்கு அடிமையாகி விடுவார்கள். பெற்றோர் அருகில் இல்லாத குழந்தைகளும், பெற்றோரின் கண்காணிப்பு குறைவாக உள்ள குழந்தைகளும் அதிகம் பாதிக்கப்படுவார்கள். மூளைப்பகுதியில் 'டோபாமின்' என்ற ஹார்மோன் சில குழந்தைகளுக்கு அதிகம் சுரக்கும். அவர்கள் இந்த விளையாட்டுக்கு எளிதாக அடிமையாகிவிடுவார்கள்.

'ஒன் லைனில்' குழந்தைகள் அதிக நேரம் விளையாடுவதும் ஆபத்துதான். அவை குழந்தைகளை தொடர்ச்சியாக விளையாட வைக்கும். பிரச்சினைக்குரிய பெரியவர்களோடு தொடர்பினை ஏற்படுத்தி புதிய தொந்தரவுகளையும் உருவாக்கும். உங்கள் குழந்தைகள் தினமும் 2 மணி நேரத்துக்கு மேல் மொபைலில் கேம்ஸ் விளையாட அனுமதிக்கா தீர்கள். வே வெளி விளையாட்டுகளிலும், நல்ல பொழுது போக்குகளிலும் அவர்களை ஈடுபடுத்துங்கள்.

தூக்கமின்மை, ஒற்றை தலைவலி, சோர்வு, பலவீனம், பள்ளி பாடங்களில் பின்னடைவு, கை- கால்- முதுகு- கழுத்துவலி, மன அழுத்தம், காரணமற்ற கோபம், எரிச்சல், சுத்தமின்மை, பொய் சொல்லுதல், சக நண்பர்களிடம் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்துதல் போன்றவை எல்லாம் மொபைல் கேம்ஸ்க்கு அடிமையானவர்களின் அறிகுறியாகும். இதை எல்லாம் தெரிந்து கொண்டு, வீட்டிற்குள் முடங்கிக் கிடக்கும் இந்த நேரத்தில் குழந்தைகளை கண்காணியுங்கள். (2)

## மீண்டும் திறக்கப்பட்டது 'காதல் சின்னம்'



(டில்லி)

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால் ஆறு மாதங்களுக்குப் பின்னர் கொரோனா வைரஸ் பாதுகாப்பு வழிகாட்டுதல்களுடன் நேற்று மீண்டும் சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் உள்ள தாஜ்மஹாலுடன் ஆக்ரா கோட்டையும் திறக்கப்பட்டது.

இந்தியாவில் பரவிய கொரோனா வைரஸ் தொற்று நோயை அடுத்து ஆக்ராவில் உள்ள இரு உலக பாரம்பரிய தளங்களும் கடந்த மார்ச் 17 முதல் மூடப்பட்டன.

இந்நிலையில் மீண்டும் திறக்கப்பட்டுள்ள தாஜ்மஹாலை பார்வையிட ஒவ்வொரு நாளும் 5,000 சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுவார்கள். பிற்பகல் 2 மணிக்கு முன் 2,500 பேரும் 2 மணிக்குப் பின்னர் 2500 பேரும் அனுமதிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் ஆக்ரா கோட்டையில் தினமும் 2,500 சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுவார்கள் என இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் ஆக்ரா பகுதிக்கான கண்காணிப்பாளர் மற்றும் தொல்பொருள் ஆய்வாளர் வசந்தகுமார் ஸ்வர்ங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாரம்பரிய தளங்களுக்குச் செல்லும்போது சுற்றுலாப் பயணிகள் சமூக இடைவெளி பேணுதல், முகக்கவசங்களை அணிதல் உள்ளிட்ட அனைத்து சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களையும் கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தாஜ்மஹால் மற்றும் ஆக்ரா கோட்டைக்குச் செல்வதற்கான அனுமதிச் சீட்டுக்களை இணையத்தின் ஊடாக மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். நேரில் பெற முடியாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் முக்கிய சுற்றுலாத் தளமாகவுள்ள தாஜ்மஹாலைப் பார்வையிட ஒவ்வொரு ஆண்டும் சுமார் 70 இலட்சம் பேர் அங்கு செல்கின்றனர்.

ஆக்ரா கோட்டையை வருடந்தோறும் கிட்டத்தட்ட 30 இலட்சம் போர் பார்வையிடுகின்றனர்.

உத்தர பிரதேச மாநிலத்துக்கு முக்கிய வருவாயை ஈட்டித் தருவதில் இந்தச் சுற்றுலாத் தளங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்நிலையில் வரலாற்றில் முதல் தடவையாக 6 மாதங்களாக தாஜ்மஹாலுடன் ஆக்ரா கோட்டையும் மூடப்பட்டிருந்த நிலையில் தொற்று நோய்க்கு மத்தியில் மீண்டும் நேற்று இவை திறக்கப்பட்டுள்ளன. (2)

# சிறு மற்றும் மத்திய தொழில்துறை

# பொருளாதாரத்தின் முதுகெலும்பாகும்

## ஊக்குவிக்குமாறு பிரதமர் அழைப்பு

(கொழும்பு)

**சிறு மற்றும் மத்திய தொழில்துறை இன்று நம் நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக காணப்படுகின்றது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அம் பாந்தோட்டை- மாகம் ருஹுணுபுர சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 'சிறு மற்றும் நடுத்தர நிறுவன மேம் பாட்டு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி விக்கையில், "பிராந்திய சிறு மற்றும் நடுத்தர தொழில் மேம்பாட்டு மாநாட்டை ஆரம்பிப்பதற்கு எனக்கு அழைப்பு விடுக்கப்பட் டமை தொடர்பில், சான் றளிக்கப்பட்ட முகாமை த்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் தலைவ ரும் சிறு மற்றும் நடுத்தர தொழில் மேம்பாட்டுக் குழுவின் ஒருங்கிணை ப்பாளருமான பேராசிரி யர் லக்ஷ்மன் ஆர்.வடவ லவுக்கு நன்றிகளை தெரி வித்துக் கொள்கிறேன்.

தொழில்முறை நிறு வனங்கள், வர்த்தக சபை, வணிக வங்கிகள் மற்றும் தொழில் வல்லு நர்களை உள்ளடக்கிய இந்நிறுவனத்தின், சிறு மற்றும் நடுத்தர தொழில் மேம்பாட்டுக் குழுவை நிறுவுவது மிகவும் சரி யான நேரத்தில் எடுக்கப் பட்ட நடவடிக்கையாகும். இது உண்மையிலேயே சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோரு க்கு மேற்கொள்ளும் ஒரு முக்கியமான சேவையா கும்.

சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை இன்று நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாகும். அது நம் நாட்டின் அனைத்து பிரிவுகளையும் பிரதி நிதித்துவப் படுத்துவது மகிழ்ச்சி அளிக்கிறது.

நமது மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 52 சதவீதத்திற்கு இத்துறை பங்களிக்கிறது.

இது அனைத்து வேலை வாய்ப்புகளிலும் 45 சதவீதம் ஆகும். மேலும், இத்துறை நாட் டின் மொத்த தொழில் முனைவோரின் எண் ணிக்கையில் 75 சதவீ தமாகும்.

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப் படும் உலக ஏற்றுமதியின் சரா சரி சதவீதம் 30 சத வீத மாகும்.

இருப்பினும், எமது நாட்டைப் பொறுத்த வரையில் அதில் 5 சத வீதமாகும். இதை அதிக ரிக்க ஒரு அரசாங்கமாக எங்கள் ஆதரவை வெளிப் படுத்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகி றேன்.

சிறு மற்றும் நடுத்தர தொழிற்றுறையின் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதற்கான ஏற்றுமதி மையத்தை நிறுவி யமை தொடர்பில் அக்கு முவை நான் வாழ்த்துகி றேன். இலங்கைக்கு மதி ப்புமிக்க அந்நிய செலா வணியை சம்பாதிப்பதற் கான இச்செயற்பாட்டிற்கு ஊக்குவிப்பது அரசாங்கம் என்ற வகையில் எமது பொறுப்புகளை நிறை வேற்றுவோம் என தெரி வித்தார். (ஜ-4)

# கொரோனா தாக்கத்தால் சவுதி அரேபியாவில் 28 இலங்கையர்கள் மரணம்



(கொழும்பு)

தொழில் நிமித்தமாக சவுதி அரேபியாவுக்குச் சென்ற இலங்கையர்க ளில் 28 பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 4 மாதங்களில் இந்த மரணங்கள் பதி வாகியுள்ளதாக சவுதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதரக வட் டாரங்கள் தெரிவித்து ள்ளன.

இந்த 28 பேரில் இர ண்டு வீட்டுப் பணிப் பெண்களும் அடங்கு கின்றனர். அதேநேரம், உயிரிழந்தவர்களின் சட லங்கள் அந்நாட்டினதும் சர்வதேச சட்டத்தின் படியும் அடக்கம் செய்ய ப்பட்டுள்ளதாக தெரிவிக்க ப்பட்டுள்ளது. (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கீதையும் நிர்வாகமும்

அரசாங்க உத்தியோகம் பார்க்கின்ற ஒருத்தர் பகவத் கீதையை படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.'' சேர்..நீங்கள் பார்க்கின்ற உத்தியோகத்திற்கும் படிக்கின்ற புத்தகத்திற்கும் கொஞ்சம் கூட சம்பந் தம் இருக்கின்றதா தெரியவில்லையே..'' என்றேன்.

“ என்ன அப்படி சொல்லிவிட்டீர்கள்...இதிலே கர்மயோகத்தைப் பற்றி பேசும் போது மூன்று தத்துவங்கள் வலியுறுத்தப்படுகின்றன.. நிர்வாகி கள் எல்லாம் அதை கொஞ்சம் புரிந்து கொண்டால் நல்லது என்றார். “அது என்னங்க.. மூன்று தத்துவங்கள்? ''என்றேன். அவர் சொல்ல ஆரம்பித்தார்.

எதிலும் பற்றற்று இருத்தல்-இது ஒரு தத்துவம். பலனை எதிர் பார்த்துச் செய்யாமை-இது ஒன்று.எதையும் ஈஸ்வர அர்ப்பணமாகச் செய்வது-இது மூன்றாவது'' என்றார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை.

“ இதற்கும் நிர்வாகத்திற்கும் என்னங்க சம்பந்தம்? '' என்றேன்.

'' விபரமாக சொல்கின்றேன் கேளுங்கள் ''என்றார். அப்புறம் சொன்னார். முதல் கருத்து என்ன? எதிலும் பற்றற்று இருத்தல்.

ஒரு அலுவலக மேலாளர் யார் மேலேயும் பற்றுக்கொள்ளாமல் எல்லோரையும் சரி சமமாக நடத்த வேண்டும். இவர் நமக்கு வேண்டி யவர்...அவர் நமக்கு வேண்டாதவர்...அப்படி என்கின்ற எண்ணம் எல்லாம் அவருக்கு வரக்கூடாது.ஒரு அலுவலகம் என்று எண்ணம் அவருக்கு வரக்கூடாது.ஒரு அலுவலகம் என்று இருந்தால் அங்கே கோள் சொல்வதற்கு என்று சில பேர் இருப்பார்கள்.. திறமையாக வேலை செய்கின்றவர்களைப் பற்றிக் கூட இவர்கள் மோசமாக அதிகாரிகளிடம் சொல்லி வைத்துவிடுவார்கள்..மேலே இருக்கின்ற வர்கள் இதைக் கேட்டு நடக்க ஆரம்பித்தால்...வேலை தான் வீணாகப் போகும்.

சரி.. இப்பொழுது அந்த இரண்டாவது தத்துவத்திற்கு வருவோம். அது என்ன சொல்கின்றது?

பலனை எதிர்பார்த்து எதையும் செய்யாதே.. அப்படி என்றால் பலனே வேண்டாம்.. என்று இதற்கு அர்த்தம் செய்துவிடக் கூடாது.

இலாபம் வந்தாலும் சரி...நட்டம் வந்தாலும் சரி..மனது ஒரே சீராக இருக்க வேண்டும்.. நட்டம் வந்தால் அதற்கு என்ன காரணம் என்பதை ஆராய வேண்டும்.அதை விட்டுவிட்டு மனது சோர்ந்து போய் உட் கார்ந்துவிடக் கூடாது. அல்லது வேலை செய்கின்றவர்களை வீட்டுக்கு அனுப்பலாம் என்று யோசிக்கக் கூடாது.

அதே மாதிரி இலாபம் வந்தால் அதற்காக துள்ளிக் குதித்துக் கொண்டு இருக்கக்கூடாது. அப்படிச் செய்கின்ற பொழுது கவனக் குறைவு ஏற்பட வாய்ப்புண்டு. இது , அடுத்த வருட நட்டத்திற்கு காரண மாககூட ஆகிவிடும்.மூன்றாவது தத்துவம் என்ன சொல்கின்றது? எதையும் ஈஸ்வர அர்ப்பணமாகச் செய்தல். ஓர் அலுவலகத்திலே வேலை பார்க்கின்ற ஒருத்தரிடம் போய் நீங்கள் யாருக்காக வேலை செய்கின்றீர்கள்? '' என்று கேட்டேன். என்ன சேர்...இப்படி கேட்கின் றீர்கள்... நான் எனக்காகத் தான் வேலை செய்கின்றேன்.. '' என்றார்.

“ அப்படியா சொல்கின்றீர்கள் '' என்றேன்.

ஆமாம். முதலாம் திகதி சம்பளம் வாங்குகின்றேன் அதற்காகத் தான் வேலை செய்கின்றேன் என்றார்.

சம்பளத்திற்காக வேலை செய்கின்றோம் என்று நினைக்காமல் இந்த நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக வேலை செய்கின்றோம் என்கின்ற நினைப்பு வரவேண்டும். அதன்மூலமாக இந்த நாட்டை வளப்படுத் துகின்றோம் என்கின்ற நினைப்பு வேண்டும். ஈஸ்வர அர்ப்பணம் என்றால் அது தான். செய்யும் தொழிலே தெய்வம். இவ்வளவையும் அந்த நண்பர் என்னிடம் விபரமாக சொல்லிவிட்டு..இப்பொழுது சொல் லுங்கள் சேர். கீதையின் கர்ம யோகத்திற்கும் காரியாலய நிர்வா கத்திற்கும் சம்பந்தம் உண்டா இல்லையா? என்றார்.நீங்கள் சொல்வது சரி.. தான்.. என்று சொல்லிவிட்டு எழுந்து கொண்டேன். வெளியிலே வந்தேன். நினைத்துப் பார்த்தேன். இன்றைக்கு அலுவலகம் எல்லாம் இப்படியாக இருக்கிறது? ஒருத்தர் கேட்டார்.“ என்னங்க இது.. உங்கள் அலுவலகம் வரவுப் பதிவுக் கொப்பியில் பென்சிலை கட்டிப் போட்டிருக் கின்றீர்கள்...'' இதையெல்லாம் கூடவா திருடிக் கொண்டு போய்விடு வார்கள் என்றார். இது 36 ஆவது பென்சில் என்றார் அவர்.

எங்கள் அலுவலகத்திலும் கூட பென்சில் திருட்டுப் போவது உண்டு.. ஆனால் அதை இப்படி வரவுப் பதிவுக் கொப்பியில் கட்டிப் போடுவதில்லை என்றார் இவர்.“ ஏன் என்று கேட்டார். அப்படி செஞ்சா வரவுப் பதிவுக் கொப்பியையும் சேர்த்துத் தூக்கிக் கொண்டுப் போய்விடுவார்கள் சேர் '' என்றார் இவர்.

# 20வது திருத்தம் முரண்பாடுகளுடன் நிறைவேற்றப்பட்டால் நல்லாட்சியின் தன்மைகளே மீண்டும் தோற்றம் பெறும்

## விதுர விசனம்

(கொழும்பு)

**முரண்பாடுகளுடன் 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டால் நல்லாட்சி அரசாங்கத்தின் தன்மைகளே மீண்டும் தோற்றம் பெறும் என தேசிய மரபுரிமைகள் மற்றும் கலை, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரம நாயக்க தெரிவித்தார்.**

வர்த்தமானியில் வெளியாகியுள்ள அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் குறித்து அரசாங்கம் பொறுப்புடன் செயற்படும். சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் அனைத்தும் பாராளுமன்றத்தின் ஊடாக முழுமையாக பரிசீலனை செய்யப்படும்.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் மற்றும் அதனால் எழுந்துள்ள சர்ச்சைகள் தொடர்பில் வினவிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் முத்துறைகளுக்குமிடையில் அதிகார முரண்பாட்டை தோற்றுவித்ததாக இருந்தாலும் நடைமுறையில் பல சாதகமான விடயங்களை கொண்டிருந்தது. மறுபுறம் பாதகமான தன்மைகளையும் கொண்டிருந்தது.

இவ்வாறான காரணிகளே நல்லாட்சி அரசாங்கத்தை மலினப்படுத்தியது. புதிய அரசியலமைப்பு உருவாக்கம், நடைமுறை அரசியலமைப்பு திருத்தம் ஆகியவற்றை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பிரதான இரண்டு தேசிய தேர்தல்களில் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியது.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் இரத்து செய்யப்பட்டு 20 ஆவது திருத்தம் தற்காலிக ஏற்பாடாக கொண்டு வரப்பட்டுள்ளமை மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் முதற் செயற்பாடாகும்.

புதிய அரசியலமைப்பினை விரைவாக உருவாக்க வேண்டும் என அரசியல்வாதிகள் குறிப்பிடுவது நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயமாகும். பல்லின மக்கள் வாழும் நாட்டில் அரசியலமைப்பு புதிதாக இயற்றப்படும் போது அனைத்து இன மக்களின் அரசியல் கருத்துக்களும் கவனத்திற் கொள்ளப்பட்டு அவை முழுமையாக பரிசீலனை செய்யப்பட வேண்டும். இது நெடு நாள் நீடிக்கும் ஒரு செயற்பாடாகும். இதற்காகவே சட்ட நிபுணர்களை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் தற்காலிக ஏற்பாடாகவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திருத்தத்தில் காணப்படும் குறைபாடுகளை மக்களும், பலதரப்பட்ட அமைப்புக்களும் சுட்டிக் காட்டியுள்ளன. வர்த்தமானியில் வெளியான திருத்தத்தை மீளாய்வு செய்ய பிரதமரால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தின் ஊடாக பரிசீலனை செய்யப்படும்.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் குறைபாடுகள், விமர்சனங்கள் ஆகியவற்றுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டால் நல்லாட்சி அரசாங்கத்தில் 19 ஆவது திருத்தத்தினால் ஏற்பட்ட விளைவுகள் நடப்பு அரசாங்கத்திலும் ஏற்படும் என்பதை அறிவுறுத்தியுள்ளோம்.

ஆகவே மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய அரசாங்கம் செயற்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என தெரிவித்தார். (2-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2123

### வாகீஸ்



நாம் யாரென்று நிரூபிக்க எத்தனை அடையாள அட்டைகள் இருந்தாலும், மனிதன் என்பதை நிரூபிக்க அன்பு ஒன்று தான் உள்ளது....!

### யாதவி




### துர்ஷா



சில இடங்களில் நம் திறமையை மறைக்க வேண்டும்... இல்லையேல் அதீத பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும்...

### தீசன்



அன்பை அறுவடை செய்ய .... உங்கள் புன்னகையை விதையுங்கள்....!

### நகுல்



ஜெயிக்கும் போது கூட இருக்கும் உறவை விட, ஜெயிப்பதக்கு கூட இருக்கும் நட்பு என்றுமே தனித்துவமானது..!!

### விதுனா



எத்தனை தடைகள் வந்தாலும்... அத்தடைகள் ஒவ்வொன்றையும் தகர்த்தி முன்னேற முயற்சி செய்தால்தான்... உங்கள் வாழ்க்கையில் வெற்றி பெறலாம்...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

73

## கலாநிதி முருகர் குணசிங்கம்

மேலும் மறைந்த மாவீரர்களுக்கு நினைவு நாள் நடத்துவதும் கலை விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதும், எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்துவதும் தொடர்ந்து செய்யப்பட வேண்டியவைகளாகும்.

அவைகளே தமிழர்களை அணி திரட்டி ஏன் ஒன்று சேர்க்கவும் ஈழ விடுதலையை நோக்கித் தொடர்ந்து பயணிக்க வைக்கும் முக்கியமான செயற்றிட்டங்கள் ஆகும்.

ஆனால் பொருளாதார வளங்களைத் தொடர்ந்து சேகரிப்பதற்குத் திடமான செயற்றிறன் மிக்க தொலைநோக்குள்ள நிறைவேற்றக் கூடிய அரசியல் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பும் மேற்படி அமைப்புகளுக்கு உண்டு.

அத்தோடு உலக நாடுகளையும் அரசுகளையும் அரசியல் தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்களையும் உரிய முறையில் அரசியல் ஞானமும் சாணக்கியமும் தந்திரோபாயமும் நிறைந்த அறிஞர்களுடன் கருத்துக்களைப் பரிமாறி ஜனநாயக வழியில் தமிழ்த் தேசியத்தை வென்றெடுக்கும் முயற்சியில் குறைந்தபட்சம் சில தொகையினராவது முழுநேரமாக இராப்பகலாக உழைக்க வேண்டும்.

தவறும் பட்சத்தில் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் ஈழ விடுதலையின் நிலைமை மிகவும் மோசமாகப் பின்தள்ளப்படும்.

இதனால் மக்கள் விரக்தியடைந்து செயல் இழந்து விடுவர். இளம் தலைமுறையினர் உரிய முறையில் வழிகாட்டல் இன்றித் தளர்ந்து தடுமாறிப் போய் விடுவர் என்பதனை மேற்படி அமைப்பு அவசரமாகவும் அவசியமாகவும் உணர்ந்து செயற்பட வேண்டிய காலகட்டம் இதுவாகும்.

எனவே அரசியல் நிலைமைகளைச் சரியான முறையில் திட்டமிட்டு மிகவும் கச்சிதமாக தொலைநோக்கோடு சகல மட்டத்தினரையும் இணைத்துக் கொண்டு



தமிழர் ஒருங்கிணைப்புக்குழு செயற்படுமேயனால் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் மேலும் நம்பிக்கையும் எழுச்சியும் வலுவடையும்.

இதன் விளைவாக ஈழத்தில் உள்ள மக்கள் நம்பிக்கையும் வலுவும் அடைந்து ஈழத்தில் இருக்கும் மிதவாத அரசியல் கட்சிகளை ஒரு குடையின் கீழ் அணிவகுக்க அழுத்தங்களைக் கொடுப்பார்கள்.

அவ்வாறான ஒரு நிலைமை புலத்திலும் களத்திலும் ஏற்படுமாயின் தமிழ் நாட்டில் வாழும் 8 கோடித் தமிழர்களும் அங்கு இயங்கும் அரசியல் கட்சிகளும் தொடர்ந்து தமது ஆதரவை ஈழ விடுதலைக்கு வழங்குவர்.

அதன்மூலம் இந்திய அரசுக்குத் தொடர்ந்து அழுத்தங்களைக் கொடுத்து ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு ஜனநாயக வழிமூலம் சுயநிர்ணய அடிப்படையில் ஒரு தீர்வைக் கொண்டு வருவதற்கு வழி வகைகளைச் செய்யக் கூடியதாக இருக்கும்.

1948 இல் இருந்து 1976 வரை ஜனநாயக வழிகளிலேயே தமிழர்கள் போராடினார்கள். ஆனால் அது படுதோல்வியிலேயே முடிந்தது.

அதன்பின்னர் ஆயுத வழிப் போராட்டங்களைக் கடந்த 30 ஆண்டுகளாக நடத்திய வேளையில் விடுதலைப் புலிகள் ஜனநாயக வழிமுறைகளை ஏற்றுப் பல பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டு வெளிநாடுகளின் உதவியுடன் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்கள்.

இறுதியில் சம்பந்தப்பட்ட உலகின் பல நாடுகள் சிங்கள அரசுக்கு ஆயுத உதவிகளையும் பல்வேறு போர்த் தந்திரோபாய உதவிகளையும் வழங்கி ஈழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கி உள்ளனர்.

இந்நிலைமைகளுக்குப் பின்னரும் ஜனநாயக வழிப் போராட்டங்கள் நடத்துவது எந்த அளவிற்கு வெற்றி அளிக்கப் போகிறது?

ஜனநாயக நாடுகள் என்று சொல்லிக் கொள்ளும் இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா என்பவை தமது சுயநல அரசியல் போக்கைக் கைவிட்டு எந்த அளவிற்கு ஈழத்தமிழர்கள் பிரச்சினையை உரிய முறையில் தீர்த்து வைக்கப் போகின்றன என்று சிலவேளை தமிழ் நாட்டுப் பற்றாளர்களும் ஜனநாயகத்தில் நம்பிக்கை இழந்தவர்களும் தொலைநோக்கோடு சிந்தித்துச் செயற்படும் இளம் தலைமுறையினரும் ஆழமாகச் சிந்தித்து ஏதாவது மாற்று வழிகளைப் புதிதாகக் கண்டு பிடிக்க வேண்டிய ஒரு நிலைமையும் ஈழத்தமிழர்களின் அரசியல் விடிவைப் பொறுத்துத் தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கும். (முற்றும்)

# பெரும்பான்மை இனத்தவரின் விருப்பம் சிறுபான்மையினருக்கு அழிவாகி விடக்கூடாது

## எச்சரிக்கும் தேசப்பிரிய

(கொழும்பு)

**பெரும்பான்மையினரின் நிலைப்பாடுதான் உண்மை எனக் கருதிச் செயற்படுவது ஜனநாயகம் அல்ல. பெரும்பான்மையினரின் நிலைப்பாடு மட்டுமே சரியானது சிறுபான்மையினரின் நிலைப்பாடு தவறு என்று கருதியமையே மூன்றாம் உலக நாடுகளின் அழிவுக்கு காரணமாகும் எனச் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டினார்.**

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் பெரும்பாலானவர்கள் ஜனநாயகம் என்பது பிரயோசனமற்றது என்று கூறுகிறார்கள். அதேபோன்று மக்கள் பிரதிநிதிகள் பிரயோசனமற்றவர்கள் என்று கூறுகின்றனர்.

மாகாணசபை உறுப்பினர்கள் இன்றி மாகாணசபைகள் இயங்குகின்றன. 6 மாதம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அற்ற பாராளுமன்றம் காணப்பட்டது. அவ்வாறெனில் எதற்காக நிதி ஒதுக்கப்படுகிறது.

மக்கள் பிரதிநிதிகள் இன்றி ஏதேனுமொரு ஆட்சி இடம்பெறுகிறது என்றால் அது சர்வாதிகார ஆட்சியாகவே காணப்படும்.


பரம்பரை ஆட்சி முன்னெடுக்கப்படுவது அரசர் காலத்திலாகும். தற்போது பெரும்பாலான நாடுகள் அவற்றிலிருந்து வெளியேறி ஜனநாயக ஆட்சியையே நடத்துகின்றன.

ஜனநாயகத்தை வெறுப்போரும்அரசியலமைப்பிற்கு முரணாகச் செயற்படுவோரும் துரோகிகளாவர். நாட்டின் முதலாவது அரசியலமைப்பில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு என்றே கூறப்பட்டுள்ளது.

ஒரு நாட்டில் நிறைவேற்றதிகாரம், சட்டவாக்கசபை மற்றும் நீதிமன்றம் என்ற மூன்றும் வெவ்வேறாக இல்லை என்றால் அது ஜனநாயக நாடு அல்ல. ஜனநாயகம் என்று பெரும்பாலானவர்களின் விருப்பம் அல்ல. பெரும்பாலானவர்களின் விருப்பம் சிறுபான்மையினருக்கு அழிவாகிவிடக்கூடாது. அவர்களது விருப்பங்களையும் அறிந்து, அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகவும் உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்காகவும் முன்வரக்கூடிய மக்கள் எமது நாட்டுக்கு தேவை.

மூன்றாம் உலக நாடுகளின் அழிவிற்கு காரணம் பெரும்பாலானவர்களின் கருத்துக்கள் தான் உண்மை என்ற நிலைப்பாட்டில் அதற்கேற்ப முழு நாட்டையும் ஆட்சி செய்தமையாகும் எனத் தெரிவித்தார். (ஜ-4)

# ராஜபக்ஷக்கள் நாட்டிற்கு பொருந்தும் விடயங்களை முழுமையாக செயற்படுத்துவர்



(கொழும்பு)

மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு அமையவே புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படவேண்டும். பிற நாடுகளின் அழுத்தங்கள், கருத்துக்களுக்கமைய அரசியலமைப்பு உருவாக்கப்படும் போது முரண்பாடுகளையே தோற்றுவிக்கும்.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் ஊடாக ராஜபக்ஷக்கள் நாட்டுக்கு பொருந்தும் விடயங்களை முழுமையாக செயற்படுத்துவார்கள் என தேசிய காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. எல். எம். அதாவுல்லா தெரிவித்தார்.

தேசிய காங்கிரஸின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பிரதமர் மகிந்த 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் போது தீவிரவாதத்தை ஒழித்தல், வடக்கு-கிழக்கு பிரிக்கப்பட்டு கிழக்கு தனி மாகாணமாக செயற்படல் மற்றும் அனைத்து இன மக்களின் அபிலாசைகளையும் உள்ளடக்கிய புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என பிரதான மூன்று கோரிக்கைகளை முன்வைத்தோம்.

தேசிய காங்கிரஸ் சார்பில் முன்வைத்த பிரதான மூன்று கோரிக்கைகளில் தீவிரவாதத்தை ஒழித்தல், கிழக்கு மாகாண சபை உருவாக்கம் ஆகிய இரண்டு கோரிக்கைகளை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி பதவி வகித்தவேளை நிறைவேற்றினார். அனைத்து இன மக்களின் அபிலாசைகளுக்கும் அமைய புதிய அரசியமைப்பு உருவாக்கம் என்ற கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. இதற்கு பல அரசியல் காரணிகள் அக்காலகட்டத்தில் தாக்கம் செலுத்தின.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பான கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனாதிபதி அக்கட்சி தலைமையிலான அரசாங்கம் தற்போது அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# அரசாங்கத்தை கவிழ்க்க 6 மாதங்கள் காலக்கெடு



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை இன்னும் ஆறு மாதங்களுக்குள் கவிழ்ப்போம் எனத் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன, கவிழப் போகும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு தான் தயாரில்லை எனத் தெரிவித்தார்.

இன்னும் ஆறு மாதங்களுக்கு மேல், இந்த அரசாங்கத்தை பயணிக்க விடமாட்டேன் என உறுதியளித்த அவர், மக்களின் மீதும் நாட்டின் மீதும் கவனத்தை செலுத்தாது, ஒரேயொரு குடும்பத்தை மேம்படுத்தவும், அதிகாரத்தை தக்கவைத்து கொள்வதற்குமே இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# கடற்கரையில் ஹெரோயின்



(கொழும்பு)

முந்தல்-சின்னபாடு கடற்கரைப் பகுதியில் இருந்து, ஹெரோயின் பொதி ஒன்று நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளதாக, உடப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

மீனவர் ஒருவர் வழங்கிய தகவலுக்கமைய, மேற்படி ஹெரோயின் பொதி மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் ஒரு கிலோ கிராம் நிறையுடைய ஹெரோயின் பொதியே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இந்தப் பொதியானது சில மாதங்கள் கடலில் இருந்திருக்கக்கூடுமென, உடப்பு பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4)

# குரங்கு அமைச்சராவதற்கு அடம்பிடிக்கும் டிலான்



(கொழும்பு)

நாட்டில் அதிகரித்துள்ள குரங்குகளின் பிரச்சினைகளை விரைவில் தீர்ப்பது அவசியம் என்பதால் "குரங்கு அமைச்சை" பெற்றுத் தருமாறும் அதனைப் பொறுப்பேற்க தயாராக இருப்பதாகவும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பதுளை மாவட்டம் உட்பட நாட்டில் பல பகுதிகளில் குரங்குகள் பெருக்கமடைந்து உற்பத்திகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ-4)

# வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சலுகை

(கொழும்பு)

கொரோனா தாக்கத்தினால் தமது தொழில்களை இழந்து வெளிநாடுகளில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள இலங்கைத் தொழிலாளர்களுக்கு மீண்டும் அதே நாட்டில் தொழில்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதற்கான புதிய நடைமுறையொன்று கடந்த 15ஆம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது குறித்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களுக்கு சுற்றறிக்கை மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த திட்டத்தின் மூலம், கொரோனா தாக்கத்தினால் தொழில்களை இழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ள மற்றும் ஒப்பந்த காலம் நிறைவுற்ற நிலையில் நாடு திரும்ப முடியாத நிலையில் காணப்படும் இலங்கைத் தொழிலாளர்கள் மீண்டும் தொழில்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)






யாழ்ப்பாணம் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கிப் பிரிவின் ஒத்துழைப்புடன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமைஇரத்ததான முகாம் இடம்பெற்றது. (படம்:- செ.ரவிசாந்)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2020 - 16.10.2020

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**சா**ர்வரி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் குரு உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். அவரது பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. உங்கள் இராசிநாதன் குருவும் வக்கிர நிவர்த்தியாகி விட்டார். தனாதிபதியாகவும், சகாய ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் சனியும் வக்கிர நிவர்த்தியாகி விட்டார். எனவே எதிர்பார்ப்புகள் ஒவ்வொன்றும் நிறைவேறும் விதத்திலேயே கிரகங்கள் சாதகமாக இருக்கின்றன.

குருவின் பார்வை பதியும் 5 ஆம் இடத்தில் செவ்வாய் இருக்கின்றது. தைரியகாரகன் செவ்வாய் வக்கிரம் பெற்றிருந்தாலும், குரு பார்வையால் 'குருமங்கள யோகம்' உருவாகின்றது. எனவே இல்லத்தில் மங்கல ஓசை கேட்கக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம். குருவின் பார்வை சந்திரன் மீது பதிவதால் 'குருசந்திர யோகம்' ஏற்படுகின்றது. தொழில் ஸ்தானம் எனப்படும் 10 ஆம் இடத்தில் சூரியனோடு புதன் இணைந்து புத ஆதித்ய யோகமும் உருவாகின்றது.

ஜென்மச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் சனி விலகும் வரை சஞ்சலங்கள் இருக்கும். குருவின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால் தந்தை வழி உறவில் இருந்த விரிசல்கள் அகலும். ஜென்ம கேது விலகிவிட்டதால் இனி படிப்படியாக முன்னேற்றங்களைக் காண்பீர்கள்.

### துலாம் புதனின் சஞ்சாரம்

செப்டெம்பர் 21 ஆம் திகதி, துலாம் இராசிக்கு புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 7,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் 11 ஆம் இடத்திற்கு வரும்பொழுது தொழில், உத்தியோகத்தில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். உத்தியோகத்தில் சம்பள உயர்வை எதிர்பார்த்து இருந்தவர்களுக்கு அது கைகூடும். தொழில் புரிபவர்கள் கூடுதல் லாபம் காண்பர். மாமன், மைத்துனர் வழியில் மகத்தான ஒத்துழைப்பு கிடைக்கும்.

# குடும்பப் பிரச்சினைகள் தீரும்

### சிம்ம சுக்கிரனின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் செப்டெம்பர் 28ஆம் திகதி சிம்ம இராசிக்கு வருகின்றார். அப்பொழுது குருவின் பார்வை சுக்கிரனின் மீது பதிகின்றது. திட்டமிட்ட காரியங்கள் நடைபெறாமல் போனாலும்,




அசுரகுரு-தேவ குருவின் சந்திப்பால் திட்டமிடாத சில காரியங்களில் வெற்றி கிடைக்கும். பிரபலங்களின் நட்பால் பெருமை காண்பீர்கள். அரசு வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு மகிழ்ச்சியான தகவல் வந்து சேரும். உடல் நலத்தில் மட்டும் கவனம் தேவை.

### புதனின் வக்கிர இயக்கம்

செப்டெம்பர் 30 ஆம் திகதி துலாம் இராசியிலும், பிறகு ஒக்டோபர் 8ஆம் திகதி கன்னி இராசியிலும் புதன் வக்கிரம் பெறுகின்றார். இந்த வக்கிர காலம் உங்களுக்கு வளர்ச்சி ஏற்படும் காலம் என்றே சொல்லலாம். எனவே அலுவலகத்தில் உங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும். பிரிந்து சென்ற உறவினர்கள் மீண்டும் வந்திணையலாம்.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குரு கவசம் பாடி குரு பகவானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் ஜென்மச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் எதிலும் நிதானமாகச் செயற்படுவது நல்லது. கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உடல் நலத்தில் மட்டும் அதிக கவனம் தேவை. புதனின் வக்கிர இயக்க காலத்தில் பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும்.

பணிபுரியும் பெண்களுக்கு சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். அனுமன் வழிபாடு அல்லல்களைத் தீர்க்கும்.



சார்வரி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே வரவைக் காட்டிலும் செலவு கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். ஏழரைச்சனியில் இப்பொழுது உங்களுக்கு விரயச்சனியின் ஆதிக்கம் நடைபெறுகின்றது. முதல் சுற்றாக இருந்தாலும், மூன்றாவது சுற்றாக இருந்தாலும் முயற்சிக்கு ஏற்ற பலன் கிடைக்காது என்பர். 2-வது சுற்றாக இருந்தால் பொங்கு சனியாக கணக்கிடப்படும். எதிர்கால முன்னேற்றத்திற்கு அடித்தளம் அமைத்துக் கொடுக்கும் விதத்தில் பொங்கு சனியின் சஞ்சாரம் அமையும்.

குரு மங்கள யோகம், குருசந்திர யோகம், புத-ஆதித்ய யோகம் ஆகிய மூன்று யோகங்களும் இம்மாதம் உருவாகின்றது. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதில் இருந்த தடைகள் ஓரளவு அகலும்.

### துலாம் புதனின் சஞ்சாரம்

செப்டெம்பர் 21 ஆம் திகதி, துலாம் இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகும் புதன் பல்வேறு வழிகளிலும் நன்மைகளை வழங்குவார். 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன் என்பதால் உத்தியோகத்தில் நீங்கள் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். தற்காலிக பணி நிரந்தரப் பணியாக மாற வாய்ப்பு உண்டு. சலுகைகளும், சம்பள உயர்வும் தானாக வந்து சேரும். விடாப்பிடியாக இருந்து நினைத்ததை சாதிக்கும் நேரமிது. வீடு மாற்றங்கள் ஒரு சிலருக்கு திருப்திகரமாக அமையும். பொருளாதாரத்தை பொறுத்தவரை முன்னேற்றமும், கடன்சுமை குறையும் அமைப்பும் உண்டு.

# திட்டமிட்ட காரியங்கள் நடைபெறும்

### சிம்ம சுக்கிரனின் சஞ்சாரம்

செப்டெம்பர் 28 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். இதன் விளைவாக பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படலாம். ஒவ்வாத உணவுகளை உட்கொள்வதன் மூலம் உடல் நலனில் திடீர் தாக்குதல்கள் உருவாகி மருத்துவச் செலவுகளையும் ஏற்படுத்தும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில்




வைத்துக் கொள்வது நல்லது. இக்காலத்தில் கொஞ்சம் மனம் தளரக்கூடிய சூழ்நிலை உருவாகும். அனுபவமிக்கவர்களின் ஆலோசனைகள் உங்களுக்கு அவ்வப்போது கைகொடுக்கும்.

### புதனின் வக்கிர இயக்கம்

உங்கள் இராசிக்கு 6, 9இற்கு அதிபதியானவர் புதன். அவர் செப்டம்பர் 30 ஆம் திகதி துலாம் இராசியிலும், ஒக்டோபர் 8ஆம் திகதி கன்னி இராசியிலும் வக்கிரம் பெறுகின்றார். இந்த வக்கிர காலத்தில் வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறிமாறி வரும். மேலதிகாரிகளின் ஆதரவு குறைவாகவே கிடைக்கும். உடன் பணிபுரிபவர்களால் சில உபத்திரவங்களையும் சந்திக்க நேரிடும். யாரிடமும் முக்கியப் பொறுப்புகளை ஒப்படைத்தால் அது சிறப்பாக நிறைவேறுமா? என்பது சந்தேகம்தான். குடும்பத்தினர்களையும் அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது. கோபத்தை குறைத்துக்கொண்டு செயற்படுவது நல்லது.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் விரதமிருந்து பெருமாளையும், சனீஸ்வரரையும் வழிபடுவது நல்லது

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் ஏழரைச்சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் வரவைக்காட்டிலும் செலவு கூடும். குடும்பத்தில் அமைதி நிலவ விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டும். தாய் மற்றும் உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு ஓரளவே கிடைக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு சலுகைகள் கிடைப்பதில் இருந்த தடைகள் அகலும். மாருதி வழிபாடு மகிழ்ச்சியை வழங்கும்.

(தொடரும்)

# 20 ஆவது திருத்தச்சட்ட விவகாரம்; விமர்சனங்களை கண்டுகொள்ளமாட்டோம்

(கொழும்பு)

**மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஜனாதிபதி ஒருவர் மக்களால் தெரிவு செய்யப்படுவாராக இருந்தால் அவருக்கு நிறைவேற்று அதிகாரங்கள் காணப்பட வேண்டுமென தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர, 20 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சியால் முன்வைக்கப்படும் விமர்சனங்களைக் கண்டுகொள்ளத் தேவையில்லை எனவும் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசமைப்புப் பேரவைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களை ஜனாதிபதியால் கூட பதவி விலக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் அவர்கள் தற்போதும் அந்தப் பதவிகளிலேயே தொடர்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

20 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் விமர்சனங்களைத் தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் கூறிய அவர், கடந்த ஆட்சிக்காலத்திலேயே நாட்டின் வளங்கள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தனவெனவும் கடந்த ஆட்சிக் காலத்தில் நாட்டில் ஏற்பட்ட ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் தொடர்பில் இப்போது எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எவரும் வாய் திறக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-4)



# ஆன்மீகம்

## அவமானங்களையே வெகுமானங்கள் ஆக்குவோம்!

தீராத மன உளைச்சலில் திரும்பத் திரும்ப பொருமிக் கொண்டிருந்தார் அவர். "நான்கு பேர் முன்னிலையில் நான் அவமானப்படுத்தப்பட்டு விட்டேன். அதை நினைக்க நினைக்க அழுகையும் வருத்தமும் அதிகமாகுது." ஆறுதலாக அவரை அரவணைத்தபடி மனைவி சொன்னாள்: "அந்த சம்பவத்தையே ஒரு சாக்காக வைத்து அவுங்க முன்னிலையிலேயே நீங்க ஜெயிச்சுக் காட்டணும். அவமானத்தையே வெகுமானமாக எடுத்துக்கிட்டு திரௌபதி சபதம் செஞ்சு சாதிச்சுக் காட்டினது தானே மகாபாரதம்!" அன்பு மனைவியின் அறிவுரையை ஏற்ற அந்த கணவர் இப்போது உறவினர்கள், நண்பர்கள் நடுவில் உற்சாகமாக உலா வந்து கொண்டிருக்கிறார். ஆம்! மற்றவர்கள் குத்திக்காட்டுவதும், குறை சொல்வதும், குதர்க்கமாகப் பேசுவதும் நம்மைப் பாதித்துவிட ஒருபோதும் நாம் அனுமதித்து விடக்கூடாது.

ஏளனம் செய்பவர்களை உதாசீனப் படுத்தாமல் அவர்களின் ஏச்சுக்காக நாம் வருந்துவது அவர்களைத்தானே வெற்றிபெற வைக்கும்? நம்மைத் தலைகுனிய வைக்க வேண்டும் என்று நினைத்துத்தானே அவர்கள் பலபேர் முன்னிலையில் பகிடி செய்கிறார்கள். கைகொட்டி கிண்டலடித்தவர்களே கைகட்டி பாராட்டும்படி நாம் பதிலடி தர வேண்டும். அவமானங்களை வெகுமானங்களாக எடுத்துக் கொண்டு வாழ்வில் வெற்றி பெற்றவர்கள் அநேகம் பேர். மகாபாரதக்கதையில் திரௌபதி துரியோதனன் கூட்டத்தினரால் துகிலுரியப்படுகிறாள். பல பேர் நிறைந்த சபையில் அவளுக்கு நேர்ந்த அவமானத்தால் அவள் கூனிக்குறுகி குலைந்து போய்விடாமல் பொங்கி எழுந்து ஆர்ப்பரித்து சபதம் செய்கிறாள்.

**"ஓம் தேவி பராசக்தி ஆணை உரைத்தேன்**
**பாவி துச்சாதனன் செந்நீர் - அந்த**
**பாழ் துரியோதனன் ஆக்கை இரத்தம்**



**மேவி இரண்டும் கலந்து - குழல்**
**மீதினில் பூசி நறு நெய் குளித்தே**
**சீவிக்குழல் முடிப்பேன் யான்! இது**
**செய்யும் முன்னே முடியேன்!**

என்று உரைத்தாள். பாஞ்சாலியின் வீர சபதத்தால்தான் பாரதப்போர் மூண்டு தீயவர்கள் அழிந்தார்கள். தூயவர்கள் வாழ்வு பெற்றார்கள். மிகப்பெரிய இதிகாசமான மகாபாரதத்தில் அவமானத்தில் அழுது கொண்டிருக்காமல் வீர சபதம் செய்த திரௌபதியின் இச்செயல்தான் மகாகவி பாரதியாரின் மனதைக் கவர்ந்தது. அதனால்தான் 'பாஞ்சாலி சபதம்' என்றே பெயரிட்டு காவியம் படைத்தார் கவியரசர். அதே பாரதியார் அன்று மேலும் ஒரு அறைகூவல் விடுத்தார். அது என்ன தெரியுமா? மேற்கே வளரும் மேன்மை கலைகள் தமிழ்மொழியில் இல்லை. அக்கலைகளை, பாடங்களை தமிழில் மொழி பெயர்த்துத் தரவும் இயலாது என்றும் பேதையர்கள் சிலர் பேசி வருகிறார்கள். தமிழ்த்தாய்க்கு நேரும் இப்படிப்பட்ட அவமானத்தைப் பார்த்துக் கொண்டு நாம் சும்மா இருக்கலாமா? சுறுசுறுப்புடன் வீறுகொண்டு எழுந்து புதிய பரிணாமங்களை நம் மொழிக்கு அளிப்போம் என்றார்.

**'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!'**
**'தந்தை அருள்வலியாலும் - இன்று**
**சார்ந்த புலவர் தவ வலியாலும்**
**இந்தப்பெரும்பழி தீரும்'**

பாரதியின் வாக்கிற்கிணங்க இன்று தமிழ்மொழி செம்மொழியாகி மேன்மை பெற்று சுடர்விடுகிறது. (தொடரும்)

# செய்தித்துளிகள்

## தனிமைப்படுத்தலிலிருந்து 136 பேர் வீடுகளுக்கு

(கொழும்பு)

கொரோனாத் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்த மேலும் 136 பேர், நேற்றுத் திங்கட்கிழமை தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து வெளியேறினர்.

கந்தகாடு, பியாகாமா மற்றும் நீர்கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள தனிமைப்படுத்தும் நிலையங்களில் உள்ளவர்களே இவ்வாறு வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை 43 ஆயிரத்து 684 பேர், கட்டாய தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்துள்ளனர்.

மேலும் தற்போது 6 ஆயிரத்து 182 பேர் 66 தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களில் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலில் உள்ளதாக கொவிட்-19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

## பொதுஜன பெரமுனவின் முக்கிய நபர் நீக்கம்

(பதுளை)

பதுளை மாநகர சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர் பதவியில் இருந்து ஆதர் சில்வா நீக்கப்பட்டார்.

ஒழுக்காற்று நடவடிக்கையின் அடிப்படையில் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பதுளை மாநகர சபையின் தவிசாளர் பிரியந்த அமரசிறி தெரிவித்தார்.

மேலும், ஆதர் சில்வாவுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட 7 முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புபட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஆதர் சில்வாவுக்கு பதிலாக நாலக்க நிஸாந்த விஜேரத்ன நியமிக்கப்படவுள்ளதாகவும் தவிசாளர் தெரிவித்தார். (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 160 | 140 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 180 | 200 |
| தக்காளி | 200 | 200 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 110 | 80 |
| கோவா | 120 | 130 | 140 | 120 |
| கரட் | 80 | 200 | 200 | 200 |
| பூசணி | 120 | 120 | 100 | 120 |
| புடோல் | 100 | 130 | 80 | 100 |
| வாழைக்காய் | 130 | 120 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 150 | 160 | 160 |
| பெரிய வெங்காயம் | 170 | 160 | 180 | 160 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 140 | 140 |
| பயற்றங்காய் | 200 | 200 | 160 | 120 |
| லீக்ஸ் | 80 | 120 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 90 | 100 | 100 |
| கறிமிளகாய் | 300 | 300 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 240 | 150 |
| போஞ்சி | 300 | 300 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 100 | 80 |
| கீரை - 1 பிடி | 50 | 25 | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 140 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 250 | 250 | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 100 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 100 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | -- | -- | 80 |




# சிலந்தி கற்றுக் கொடுத்த பாடம்

ஸ்கொட்லாந்தின் மன்னனாக பொறுப்பேற்றான் ராபர்ட் புரூஸ் என்ற மன்னன். இருப்பினும் கொஞ்சமும் மன நிம்மதி இல்லை.

இங்கிலாந்து நாட்டிற்கும், ஸ்கொட்லாந்திற்குமிடையே மன வேறுபாடு அதிகரித்தபடி இருந்தது. இங்கிலாந்தின் மேல் படையெடுத்தும், தோல்வியே கிடைத்தது.

புரூஸ், ஸ்கொட்லாந்தில் நிச்சயமற்ற ஆட்சிப் பதவி வகித்து வரலானான். அவனுக்குப் போட்டியாக, "ஜான் பாலியால்' என்பவன், தானும் மன்னன் ஆகவேண்டும் என்பதில் மும்முரமாக ஈடுபடலானான்.

இந்த சிக்கலை இங்கிலாந்தின் மன்னன், "எட்வர்டு' தீர்த்து வைப்பதன் மூலம், இரு நாட்டுப் பகையும் முடிவுக்கு வரும் என்று எண்ணி, அங்கு சென்றனர்.

இவர்களுக்கு சரியானபடி முடிவு கூறாமல், எட்வர்டு கேவலப்படுத்தினான். "பேதைகளே... இந்த நாடு எங்களுக்குச் சொந்தம். நீங்கள் என் அடிமைகளாகத்தான் இருக்க வேண்டும். மன்னனாக ஆகக்கூடாது. விடவும் மாட்டேன்," என்று தன் மார்பைத் தட்டினான்.

புரூசுக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டது. தன் நாட்டை இழிவாகச் சொன்னவனை விடக்கூடாது என்று எண்ணியபடி, மேலும் படையெடுத்தான்.

இங்கிலாந்து மன்னனோ தக்க பதிலடி கொடுத்தான். பலமுறை போர் நடந்தது. இறுதி வரை ஆங்கிலேயர் வெற்றி பெற்றதோடு அல்லாமல், ஸ்கொட்லாந்தில் மன்னர்கள் அமர்ந்து பதவி ஏற்கும், "புனிதக்கல்லை' பெயர்த்துச் சென்று லண்டன் நகரில் புதைத்தனர்.

ராபர்ட் புரூஸ் மிகுந்த துன்பத்துடன் மலைப்பகுதியில் உள்ள குகை ஒன்றை அடைந்தான். ஓரிடத்தில் ஓய்வெடுக்கலானான்.

ஒருபுறம் இருந்து தோன்றிய சூரிய ஒளியில், இவன் எதிரே சிலந்தி வலை ஒன்று தெரிந்தது. சிலந்தி வலையின் ஒரு இழையில், சிலந்தி ஒதுங்கிக் கொண்டு இருந்தது.

அச்சிலந்தியானது அந்த இழையை எதிரே உள்ள குகையின் சுவற்றுடன் இணைத்துவிட முயற்சி செய்து கொண்டிருந்தது.



இலேசான காற்று இழையில் தொங்கிய சிலந்தி, ஊசலைப் போல் ஆடலாயிற்று. ஒரு முறையல்ல, இரு முறையல்ல.. சிலந்தி பலமுறை முயன்றது. சிறிதும் சோர்ந்து போகவில்லை.

புரூஸ், சிலந்தியை உன்னிப்பாகக் கவனித்தான். கடைசியாக சிலந்தி தன் இழையை மறுமுனையுடன் இணைத்தது. சிறிது நேரம் நின்று விட்டு வலையைப் பின்ன ஆரம்பித்தது.

நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த புரூஸ், அதையே தன் லட்சியமாகக் கொண்டு, துள்ளி எழுந்தான். தன் வீரர்களைத் திரட்டினான்.

30 ஆயிரம் பேர் இருக்கின்றனர். எதிரி நாட்டிலோ ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் இருக்கின்றனர். இம்முறை வெல்ல வேண்டும் என்று உறுதியுடன் அஞ்சா நெஞ்சுடனும், தன்னம்பிக்கையுடனும் எதிர்த்து, பெரு வெற்றி பெற்றான். ஆங்கிலேயரது படை வீரர்கள் சிதறி ஓடினர்.

ராபர்ட் புரூஸ், சிலந்தியை வழிகாட்டியாகக் கொண்டே எதிரியை விரட்டியடித்து, வரலாற்றில் முதல் இடத்தைப் பெற்றான். அவனது புகழுக்கு சிலந்தியே காரணம்

**நீதி : விடா முயற்சி வெற்றியைத் தரும்**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கலாரசிகனின் கலைக்கோயில்


கோயிலின் திருச்சுற்று மாளிகையும் தெய்வத் திருவுருவங்களும் பலத்த சேதாரம் அடைந்துள்ளன. விமானத்தோடு இணைந்துள்ள மகா மண்டபமும் சிதைந்துள்ளது.

பாண்டியர்கள்தான் சோழர்களின் ஜென்ம எதிரிகள். சோழர்களால்தான் அவர்கள் பெரும் அழிவைச் சந்தித்தார்கள்.

ஆனால் கி.பி. 1218 இல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் தஞ்சை நகரை அழித்தபோது பெரிய கோயிலுக்குப் பெரிய பாதிப்புகள் எதுவும் ஏற்படவில்லை. இருந்தபோதும் வினை மாலிக்காபூர் உருவில் வந்தது.

கி.பி. 1311 இல் மாலிக்காபூர் படையெடுப்பில்தான் பெரிய கோயிலுக்கு அதிக சேதாரங்கள் ஏற்பட்டன.

முகமதியப் படையினர் நந்திபுரத்தை அழித்தது மட்டுமல்லாமல் சுற்றுப்புற நகரங்களில் பெருத்த சேதாரத்தை ஏற்படுத்தி ஏராளமான பொருட்களை




கொள்ளையடித்துச் சென்றார்கள்.

மாலிக்காபூரின் படையெடுப்பால் பெரிய கோயிலுக்கு ஏற்பட்ட இழப்பைப் பின்னால் ஆட்சிக்கு வந்த பிரமிச்சி நாயக்கர் கோயில்மீது கொண்ட காதலால் திருப்பணி செய்து கோயிலின் அழகுக்கு மேலும் பங்கம் வராமல் பார்த்துக்கொண்டார்.

அதேசமயம் நாயக்க மன்னர்கள்தான் கோயிலின் பல கோபுரங்களில் இருக்கும் சிற்பங்களுக்குச் சுதை பூசியும் புதிய சுதை சிற்பங்களை வைத்தும் மாற்றங்கள் செய்துவிட்டார்கள்.

இரண்டாம் உலகப் போரின்போது விமானப் படைத் தாக்குதலைச் சமாளிக்க ஒரு யுத்தப் படையும் இவ்வாலயத்தினுள் முகாமிட்டிருந்தது.

ராஜராஜன் காலத்துக்குப் பிறகு பாண்டியர்கள், நாயக்கர்கள், மராட்டியர்கள் ஆகியோரின் ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றது. ஆனால் அவர்கள் எவராலும் பெரியகோயிலுக்கு இணையான ஒரு கலைப்படைப்பைக் கொண்டு வரமுடியவில்லை.

கல்லில் வடித்த கோயில் என்பதால் எந்த மன்னராலும் இயற்கையாலும் அழிக்க முடியாத பொக்கிஷமாக இருக்கிறது பெரிய கோயில்.

பிரிட்டானிகா கலைக்களஞ்சியத்தில் தமிழர்களை மிகப்பெரும் பொறியியல் அறிஞர்கள் என்று எழுத வைத்த கோயில் இது.

தமிழகச் சிற்பிகள் கலைத்திறனும் அவர்களது அறிவியல் அறிவும் கற்பனைத் திறனும் தமிழர்களின் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை பெருமையையும் சோழர்களின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் கலாசாரத்தையும் வெளிப்படுத்த இப்படியொரு கோயிலைக் கட்டினார் ராஜராஜன்.

அவருடைய கலாரசனையையும் தொலை நோக்குப் பார்வையையும் என்னவென்று வியக்க. இத்தனை கவின்திறனோடு படைக்கப்பட்டாலும் பெரியகோயில் ஒரு முற்றுப் பெறாத காவியம். அதில் கிட்டத்தட்ட 52 இடங்களில் வேலை முழுமையடையவில்லை.

(தொடரும்)

முயற்சி இல்லையென்றால் உன்னால் ஜெயிக்க முடியாது. முயற்சி இருந்தால் உன்னால் தோற்க முடியாது.
– அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்...

உணவுப் பண்டங்கள் உள்ளிட்ட அத்தனை பொருட்களினதும் விலைகள் எகிறிக் கொண்டே இருக்கின்றன.

ஒரு கிலோ உழுந்து ஆயிரம் ரூபாவைக் கடந்து விட்டது. ஒரு தேங்காய் நூறு ரூபாவுக்கு வந்துவிட்டது.

தவிர அரிசி, எள்ளு, பயறு என அனைத் துத் தானியங்களினதும் விலைகள் நாளுக்கு நாள் ஏறிய வண்ணமும் இருக்கிறது.

திருமணம் உள்ளிட்ட அத்தனை சபை சந்திகளிலும் பரிமாறப்படுகின்ற உழுந்து வடை இப்போது இல்லாமல் போய், கடலை வடை அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது.

இவ்வாறாக தானியங்களின் விலை ஏற் றம் எங்கள் உணவுக் கலாசாரத்தில் மாற் றத்தை ஏற்படுத்தப் போகின்றது.

எனவே உணவுப் பொருட்களின் விலை யேற்றத்தை எதிர்கொள்ள விவசாய முயற்சி களில் நாம் அனைவரும் ஈடுபட வேண்டும்.

எங்கெல்லாம் நிலம் இருக்கிறதோ அங் கெல்லாம் தானிய விதைப்புகளும் மரக்கறிச் செய்கைகளும் நடந்தாகட்டும்.

வீடுகள் தோறும் தென்னங்கன்று நட்டு வீட்டுத் தேவைக்கான தேங்காயை குடியிருக் கும் வளவில் பெற்றுக் கொள்கின்றதான முயற்சிகளும் கட்டாயம் தேவை.

உண்மையில் எங்கள் வாழ்விடத்தில் வள மிக்க மண் வீணே கிடக்கிறது.

அதேநேரம் எதுவுமில்லை என்று நாம் வருந்துகிறோம். இங்குதான் ஒரு பெரும் உண்மையை வள்ளுவர் நமக்கு எடுத்து ரைக்கிறார்.

ஆம்,

*இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்*

என்றார் வள்ளுவர்.

எதுவுமில்லையே என்று கவலைப்படு வோரைப் பார்த்து நிலமகள் வெட்கித் தலை குனிவாள்.

இங்குதான் ஓர் உண்மை புலப்படுத்தப்படு கிறது. அதாவது இந்த மண்ணில் பிறந்த நமக்குத் தேவையான அனைத்தையும் நில மகள் தந்தீவாள்.

அதனைப் பெற்றுக் கொள்ள நாம் முயற்சி யுடையவர்களாக இருக்க வேண்டும்.

எனினும் இப்போது எங்கள் வாழ்வில் உடல் உழைப்புக்கு இம்மியும் இடமில்லை என்றாயிற்று.

அரச உத்தியோகம், வர்த்தகம், கௌரவ மான வேலை என்றவாறு எங்கள் வாழ்க் கைப் பயணம் செல்கிறது.

விவசாய முயற்சி பற்றி நாம் கிஞ்சித்தும் நினைப்பதில்லை.

இவ்வாறான சூழ்நிலையில்தான் உணவுப் பொருட்களின் விலைகள் வானத்தின் உச்சத் தைத் தொடுவதற்கு முயற்சி செய்கின்றன.

எனவே நம்மை வாழ வைக்கும் பூமியை வளமாக்குவோம். அதனூடு எங்களுக்கான உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வோம்.

இவ்வாறு செய்தால் மண்ணில் நல்ல வண்ணம் நாம் வாழலாம்.

# தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

**மத்திய மாகாணம் நுவரெலியா மாவட்டத்துக்கு உட்பட்ட நானுஓயா, உடரதல்ல தோட்டத் தொழிலாளர்கள் கடந்த 10 நாட்களாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.**

தோட்ட நிர்வாகத்தின் செயற்பாடுகளைக் கண் டித்தும், கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத் துமே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

"கெலனிவெளி பிளான் டேசன்" நிர்வாகத்துக்கு ட்பட்ட குறித்த தோட் டத்தில் சுமார் 275 தொழி லாளர்கள் பணியாற்று கின்றனர்.

எனினும், இவர்க ளுக்கான தொழில்சார் உரிமைகளையும், சலு கைகளையும் தோட்டத் துரை (முகாமையாளர்) திட்டமிட்ட அடிப்படையில் தடுத்து வருகின்றார் என்று தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஓராண்டு காலமாக அவரின் அடக்குமுறை தொடர்வதாகவும், அத ற்கு எதிர்ப்புத் தெரிவித் தும், நீதிகோரியுமே தாம் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர் என்று தொழிலாளர்கள் தெரி வித்துள்ளனர்.

கடந்த 12ஆம் திகதி முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இவர்கள் நேற்று அங்கு ஆர்ப்பாட்டம் ஒன் றையும் முன்னெடுத்திரு ந்தனர்.

வேலைசெய்யும் எம்மை கொழுந்து இல் லாத மலைகளுக்கு சென்று பறிக்குமாறு அழு த்தம் கொடுக்கப்படுகின் றது. இவ்வாறாக எமது உழைப்பு சுரண் டப்படுகின்றது. இதனா லேயே நாம் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்" - எனப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (ஜ-4)

# அவுஸ்திரேலியா - இலங்கை பேச்சு

(கொழும்பு)

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை விரிவுபடுத்துவதற்கான வழிகள் குறித்து இல ங்கை மற்றும் அவுஸ்தி ரேலியாவிற்கு இடை யில் நேற்று பேச்சு வார்த்தை இடம்பெற்று ள்ளது.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுடன் தொலைபேசியில் தொட ர்பு கொண்டு பேசியுள்ள அவுஸ்திரேலிய வெளி விவகார அமைச்சர் மொறைஸ் பெய்ன், மீண் டும் வெளிவிவகார அமை ச்சராக நியமிக்கப்பட்ட தற்கு அமைச்சருக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இரு வெளிவிவகார அமைச்சர்களும் பன்முக தன்மையை ஊக்குவிப் பதற்கும் விரிவுபடுத் துவதற்குமான வழிகள் மற்றும் வழிமுறைகள் குறித்து விவாதித்தனர் என்று இலங்கை வெளி விவகார அமைச்சு டுவிட் செய்துள்ளது. (ஜ-4)

## குணமடைந்தோர் 3100

(கொழும்பு)

நாட்டில் நேற்றுத் திங் கட்கிழமை மேலும் 12 கொரோனாத் தொற்றா ளர்கள் குணமடைந்துள் ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களில் 8 பேர் அங்கொடை தொற்று நோய் வைத்தியசாலை யிலிருந்தும் 3 பேர் வெலிகந்த வைத்திய சாலையிலிருந்தும் மற் றும் ஒருவர் இரணவில வைத்தியசாலையிலி ருந்தும் பூரண குணம டைந்து வெளியேறி யுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித் துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றி லிருந்து குணமடைந் தோர் எண்ணிக்கை 3,100 ஆக உயர்வடை ந்துள்ளது.

இதேவேளை, நாட் டில் 3,287 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதில் 174 பேர் நாடு முழுவதும் உள்ள 5 வைத்தியசா லையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் 38 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் உள் ளனர்.

இலங்கையில்கொரோ னாத் தொற்றுக்குள்ளான 13 பேர் இதுவரை உயிரி ழந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஜ-4)

## மரம் முறிந்து விழுந்ததில் மின்சாரம் தடைப்பட்டது

(நெளுக்குளம்)

வவுனியாவில் தற் போது வீசிய கடும் காற் றினால் வவுனியா ஏ-9 வீதி நீதிமன்றத்திற்கு அருகாமையில் நின்ற பாரியமரம் முறிந்து வீழ் ந்ததில் மின்சாரம் தடை ப்பட்டுள்ளது.

வவுனியா வீதி அபி விருத்தி நிறைவேற்று பொறியியலாளர் அலு வலகத்திற்கு முன்பாக வீதியோரத்தில் நின்ற பாரிய முதிரை மரம் அடி யோடு சரிந்து வீழ்ந்ததில் மின்சார கம்பங்கள் உடை ந்து மின்சாரம் தடைப்பட்ட தோடு, நீர் விநியோக மும் பகுதியளவில் பாதிப் படைந்துள்ளது.

அத்தோடு அலுவல கத்தின் பெயர் பதாகை சிதைவடைந்துள்ளது டன் அலுவலகத்திற்கு செல்லும் பிரதான பாதை யும் தடைப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக வவுனியாவில் கடும் வெப் பமான காலநிலை நிலவி வந்ததுடன் தற்போது அதிக காற்றுடனான கால நிலையாக காணப்படு கின்றமை குறிப்பிடத்தக் கது.

அவ்விடத்திற்கு விரை ந்த மின்சார சபையினர் மின்சார இணைப்புக் களை சீர்செய்யும் பணிக ளில் ஈடுபட்டு வருகின்ற னர். (5-299)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**கவிதை எழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன் வாழ்க்கையையே கவிதையாகச் செய்தோன் அவனே கவி.**
**-சுப்பிரமணிய பாரதி**

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பரா மரிப்பு வேலைகளுக் காக நாளை 23 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** மடத்துவெளி, இறுப்பிட்டி, கேரதீவு, புங்குடுதீவு அரசடி சந்தி, நடுவுத்துருத்தி, குறி காட்டுவான், ஆலடி சந்தி, புங்குடுதீவு பிரதேசம், வல் லான், புங்குடுதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதே சத்தில்** வேரவில், வலைப் பாடு, கிராஞ்சி ஆகிய பிரதே சங்களில் மின்சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### கல்வியின் சிறப்பு



மனதை ஒருமுகப்படுத்து வது தான் என்னைப் பொறுத்தவரை யில் கல்வியின் அடிப்படையான இலட்சியமாகும். எத்தகைய கல்வி தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைத் தனது சொந்தக் கால்களில் நிற் கும்படி செய்கிறதோ அது தான் உண்மையான கல்வி யாகும்.

வாழ்க்கையை உருவாக் கக்கூடிய மனிதனை மனிதனா க்கக்கூடிய, நல்லொழுக்கத்தை வளர்க்கக் கூடிய கருத்துக்க ளைக் கிரகித்து அவற்றை நாம் நம்முடையவையாக்கிக்கொள்ள வேண்டும். (தொடரும்)

# தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் வெற்றியீட்டும் போட்டியாளர்களாக யாழ்.மாவட்ட வீர,வீராங்கனைகள் திகழ்வர்



## அங்கஜன்

ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து நடத்தும் கூடைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி கடந்த 19ஆம் திகதி மாலை யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்ட சங்க ஆடுதளத்தில் இடம்பெற்றது.

இந்த போட்டியில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதி தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அங்கஜன் இராமநாதன் இவ் விளையாட்டு திடல் ஆனது மின்னொளியால் மிளிர்ந்து சிறந்த மைதானமாக காட்சி தருகிறது.

இந்த மைதானத்தை மெருகூட்ட என்னால் முடிந்தவற்றை செய்வேன். மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுடன் ஏற்கனவே யாழ், கிளிநொச்சி மாவட்டத்தின் விளையாட்டுக்கள் தொடர்பான பல்வேறு முன்னேற்றகரமான வேலைத் திட்டங்கள் பற்றி கலந்துரையாடினோம்.

அவை நடைமுறைப்படுத்தப்பட்டு எதிர்காலத்தில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் விளையாட்டு போட்டிகளில் யாழ்.மாவட்ட வீர,வீராங்கனைகள் வெற்றியாளர்களாக திகழ்வார்கள் என நம்புகிறேன்.

இவ்விளையாட்டுக்களில் பங்கு பற்றி இன்று வீரர்களாகவும் நாளைய நாட்டின் சிறந்த பிரஜைகளாக மிளிர இளைஞர்.யுவதிகளாகிய உங்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன் என்றார்.

தொடர்ந்து போட்டியில் பங்குபற்றிய அணிகளுக்கும் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கு பரிசில்களை வழங்கிவைத்தார். (4)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# பிரபல தொகுப்பாளர் மாயந்தி லங்கர் இம்முறை ஐ.பி.எல்.இல் இருந்து நீக்கம்



2020 ஐ.பி.எல். தொடரில் பிரபல தொகுப்பாளர் மாயந்திலாங்கர் கலந்து கொள்ள மாட்டார் என்று ஐ.பி.எல். நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்தியா மட்டுமன்றி உலகம் முழுவதும் தனக்கு என்று தனியாக ரசிகர் பட்டாளத்தை கொண்டவர்தான் மாயந்திலாங்கர்.

ஐ.பி.எல். மட்டுமின்றி பல்வேறு பி.சி.சி.ஐ.போட்டிகள், உலகக் கிண்ணம் போட்டிகளையும் இவர் தொகுத்து வழங்கி இருக்கிறார்.

அனைத்து கிரிக்கெட் வீரர்களுக்கும் நெருங்கிய நண்பர். கிரிக்கெட் வீரர் ஸ்டுவர்ட் பின்னி உடனான நட்பு ஒரு கட்டத்தில் நெருக்கமாகி, அது காதலாக மாறி பின்னர் திருமணத்தில் முடிந்தது.

இந்த நிலையில் இந்த ஐ.பி.எல். தொடரில் மாயந்தி லாங்கர் தொகுத்து வழங்க மாட்டார் என்று ஐ.பி.எல். நிர்வாகம் அதிகாரபூர்வமாகவே உறுதி செய்துவிட்டது.

அதற்கான காரணம் மாயந்தி - பின்னி ஜோடிக்கு குழந்தை பிறந்துள்ளது.

இதனால், ஐ.பி.எல். தொடரில் தொகுப்பாளராக அவர் கலந்து கொள்ள முடியவில்லை. மேமாதம் போட்டி நடந்து இருந்தால் கண்டிப்பாக தொடரில் கலந்து கொண்டு இருந்திருப்பேன் என்று மாயந்தி குறிப்பிட்டுள்ளார்.

தான் கர்ப்பமாக இருந்த போது முக்கியமான சில உதவிகளை ஐ.பி.எல். நிர்வாகம் செய்தது. இதற்கு மிக்க நன்றி.

விரைவில் மீண்டும் தொகுப்பாளினியாக திரும்பி வருவேன் என்று இவர் கூறியுள்ளார்.

மேலும், தான் குழந்தையுடன் இருக்கும் புகைப்படத்தையும் மாயந்தி வெளியிட்டு இருக்கிறார். இதுதான் இவரின் நீக்கத்திற்குக் காரணம் என தகவல் வெளியாகியுள்ளது. (4)

# இன்னும் சில போட்டிகளில் பிராவோ இடம் பெறமாட்டார்

## பயிற்சியாளர் ஸ்டீபன் தெரிவிப்பு



சென்னை அணியில் பிராவோ இன்னும் சில போட்டிகளில் இடம் பெறமாட்டார் என அணியின் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழா கடந்த 19ஆம் திகதி ஆரம்பமானது. மைதானத்தில் ரசிகர்கள் இல்லை என்றாலும் முதல் ஐ.பி.எல்.போட்டி பரபரப்பாகவே இருந்தது. சென்னை - மும்பை அணிகள் மோதிய போட்டியில் சென்னை அணி தனது முதல் வெற்றியை பதிவு செய்தது.பட்டிங், பந்துவீச்சு, பீல்டிங் என சென்னை அணி சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

ஆனால் சென்னை அணியில் ஓல்-ரவுண்டர் பிராவோ இடம் பெறவில்லை. இதுகுறித்து பேசிய அணியின் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங், “சென்னை அணியில் பிராவோ இன்னும் சில போட்டிகளில் இடம் பெறமாட்டார்.

அவரது கால் முட்டியில் காயம் ஏற்பட்டு தற்போது அவர் ஓரளவு குணமடைந்து மீண்டுள்ளார் இன்னும் சில நாட்களின் பின்னரே அவர் மீண்டும் களமிறங்குவார் எனவும் தெரிவித்தார். (4)

# இம்முறையும் கிண்ணம் மும்பைக்கே

## டெண்டுல்கர் நம்பிக்கை



ஐ.பி.எல். கிண்ணத்தை இம்முறை மும்பை இந்தியன்ஸ் அணி நிச்சயம் வெல்லுமென்று நம்புவதாக கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

13வது ஐபிஎல் சீசன் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வருகிறது. கடந்த 19 ஆம் திகதி தொடங்கிய முதல் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும், மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதின. இதில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சிறப்பாக ஆடி வெற்றி பெற்றது.

இந்நிலையில் சச்சின் இந்த ஐ.பி.எல். போட்டியில் கிண்ணத்தை மும்பை இந்தியன்ஸ் அணி நிச்சயம் வெல்லும், போட்டி எங்கு நடந்தாலும் எப்போதும் எனது ஆதரவு மும்பை அணிக்கு உண்டு. மும்பை மற்றும் இந்தியன்ஸ் ஒன்றிணையும் போது அது மும்பை இந்தியன்ஸ் ஆகிறது என தெரிவித்துள்ளார். (4)

## ரயிலில் மோது...

காலை 8 மணியளவில் ஆனந்தபுரம் கிழக்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில், மலையாளபுரம் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய யோகேந்திரன் அயந்தன் என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் 2017ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சையில் 3ஏ சித்தி பெற்றவராவார். (ம-3,60,312)

## பேருந்திலிருந்து...

மடைந்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

துணுக்காய்ப் பகுதியில் இருந்து யாழ் நோக்கி வந்த தனியார் பேருந்தின் முன் இருக்கையில் இருந்து தாய் ஒருவர் தனது ஐந்து மாதக் குழந்தையுடன் பயணம் செய்துள்ளார்.

இந் நிலையில் சாவகச்சேரி பகுதியை அடைந்ததும் திடீரென வீதிக்கு குறுக்கே வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றைக் காப்பாற்றும் நோக்கில் பேருந்து சாரதி சடுதியாக பேருந்தை நிறுத்த முயற்சித்துள்ளார்.

இதன்போது முன் இருக்கையில் கைக் குழந்தையுடன் இருந்த தாயார் நிலை தடுமாறி பேருந்தின் உள்ளே விழுந்துள்ளார். அதன்போது கையில் இருந்த குழந்தை உருண்டு பேருந்தின் வெளியில் விழுந்து தலையில் காயமடைந்துள்ளது.

காயமடைந்த குழந்தை உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதில் துணுக்காய் அக்கிராயன் கிழக்கு கடதாசிக் குடியிருப்பைச் சேர்ந்த சு.லோஜன் என்ற குழந்தையே தலையில் காயமடைந் துள்ளது. (ம-3,30)

## 18 வயது யுவதி...

2.00 மணியளவில் மதுவரி திணைக்கள அதிகாரிகளிற்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த நபர் யாழ். கொழும்புத்துறைப் பகுதியில் ஹெரோயினை மறைத்து வைத்திருந்த வேளையில் மதுவரித் திணைக்கள அதிகாரி களினால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-3)

## 20ஆவது திருத்த...

அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், இரட்டைக் குடியுரிமையைக் கொண்டவர்கள், எவ்விதமான பிரச்சினைகளும் இன்றி, இந்நாட்டின் பாராளுமன்றத்தில் பிரதிநிதியாவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

அவ்வாறான அனுமதியின் ஊடாக, புலம்பெயர்ந்திருக்கும் தமிழ்ப் புலிகள் உட்பட, இரட்டைக்குடியுரிமையைக்கொண்ட எந்தவொரு நபர்களும் பாராளுமன்றத் துக்குள் நுழைந்து கொள்ள முடியும்.

யாராவது ஒருவர் முன்னைய பயணத்தைத் தொடர்வதற்குத் தயாராக இருந்தாராயின், அது வரலாற்றில் செய்யும் பாரிய துரோகமாகும்.

வேலுப்பிள்ளை பிரபாகரனால் பெற்றுக்கொள்ள முடியாததை, 20ஆவது திருத்த சட்டத்தின் ஊடாகப் பெற்றுக்கொடுப்பதற்குச் சிலர் முயற்சிக்கின்றனர்" என்றார். (ம-3)

## கிளிநொச்சி...

மைத்துவ நிலைய புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

நேற்று மாலை 3.30 மணிவரையான புள்ளிவிபர தகவல்களின் அடிப்படையாகக் கொண்டு குறித்த தகவல் வழங்கப்பட்டுள்ளது

அந்தவகையில் 8 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும், அடிப்படை கட்டமைப்புக்கள் 5 சேதமடைந்துள்ளதாகவும் அப்புள்ளி விபரம் தெரிவிக்கின்றது. (ம-3,100)

## பாராளுமன்றில்...

ஜி.எல்.பீரிஸ், 20ஆவது திருத்தம் குறித்து வெளியான வர்த்தமானி அறிவித்தலை எந்த சூழ்நிலையிலும் அரசாங்கம் மீளப்பெறாது எனக் கூறினார்.

19ஆவது திருத்தத்தை நீக்கிவிட்டு புதிய சட்டமூலத்தை சமர்ப்பிப்பதற்கான மக்கள் ஆணையை அரசாங்கம் பெற்றுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## தியாக தீபம்...

பனின் நினைவேந்தலை தடை விதிக்கக் கோரி யாழ்ப்பாண நீதிமன்றத்தில் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு நேற்றுக் காலை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மன்றில் முன்னிலையாக பொலிஸார் கால அவகாசம் கோரியதால், விசாரணை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதையடுத்து, பிற்பகல் விசாரணை ஆரம்பமாகியபோது, மன்றில் பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி சிறிகாந்தா 160ஆவது பிரிவின் கீழ் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தது தவறு என்று வாதிட்டதுடன், நினைவேந்தலுக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்றும் கோரினார்.

பிரதிவாதிகள் தரப்பு சமர்ப்பணங்களை தொடர்ந்து பொலிஸார் தமது நிலைப்பாட்டை எடுத்துக் கூறினர். திலீபன் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் தான் என்றும் அவரது நினைவேந்தலை அனுமதிக்கக் கூடாது என்றும் அவர்கள் வாதங்களை முன்வைத்தனர்.

நினைவேந்தலுக்கு வெளிமாவட்டங்களில் இருந்து பொதுமக்களை அவர்களின் விருப்பமின்றி அழைத்து வரப் போகிறார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட யாழ்ப்பாண நீதிமன்ற நீதவான், இந்த வழக்கில் நினைவேந்தல் தடையை நீடிப்பதா அல்லது நினைவேந்தலுக்கு அனுமதி அளிப்பதா என்று எதிர்வரும் 24ஆம் திகதி உத்தரவிடுவதாக அறிவித்துள்ளார். (ம-3,8)

## இந்திய பிரதமர்...

பிராந்திய விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளதாக "இந்தியா டுடே" செய்தி வெளியிட்டுள்ளது.

அயல்நாட்டு தலைவர் ஒருவருடன் இரு தரப்பு உறவு குறித்து இந்திய பிரதமர் மேற் கொள்ளும் முதலாவது சந்திப்பு இதுவென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேதினம் இந்திய பிரதமர், ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் உரையாடவுள்ளார். (ம-3)

## பகிடி...

வங்களுடன் தொடர்புபட்டுள்ளதால், யாழ்ப்பாணம், தென் கிழக்கு பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த 8 மாணவர்களே இந்த வாழ்நாள் தடையை எதிர்கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒலுவில் பல்கலைக்கழகத்தில் பிரயோக விஞ்ஞான பீடத்தின் புதுமுக மாணவர்கள் பகிடிவதைக்கு உட்படுத்தப்படுவதாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவுக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதனடிப்படையில் பகிடிவதை புரியும் மாணவர்கள் வெளியேற்றப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுமுக மாணவர்களை பகிடிவதைக்குள்ளாக்கும் முதுநிலை மாணவர்கள் சிலர் அவர்களை பல்கலைக்கழகத்தில் வலுக்கட்டாயமாக வைத்திருந்ததாகவும், வார இறுதி நாட்களில் வீடு திரும்புவதைத் தடுத்ததாகவும் கூறப்படுகிறது. (ம-3)

## கடுமையாக...

சிறைபிடித்து வைத்திருந் தார்.

சுமார் ஒரு மணிநேரம் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளை சிறைபிடித்து வைத்த அம்பிட்டிய சுமணரத்ன தேரர் சம்பவ இடத்திற்கு அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் மற்றும் பொலிஸார் உடன் வரவேண்டும் எனக் கூறியுள்ளார்.

பின்னர் பொலிஸார் வந்து பிக்குவுடன் சமாதானம் பேசி தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளை மீட்டுள்ளனர்.

பிக்குவால் தாக்கப்பட்ட மூன்று தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளும் கரடியனாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

32 வயதுடைய பொன்னம்பலம் மதன், 36 வயதுடைய தர்மராஜா ஜெசிதரன், அம்பாறை தொல்பொருள் திணைக்களத்தைச் சேர்ந்த 36 வயதுடைய லால் கேமந்த ஜெயலத் உள்ளிட்ட மூன்று தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளே இவ்வாறு தேரரால் தாக்கப்பட்டு சிறைபிடிக்கப்பட்டனர். (ம-3)






















**COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS**

Care Giver Course - பராமரிப்பாளர் பயிற்சி நெறி

சிறுவர் பராமரிப்பு / முதியோர் பராமரிப்பு
விசேட தேவையுள்ளோர் பராமரிப்பு /வீட்டு பராமரிப்பு

- கனடாவில்/வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள
- படித்துக்கொண்டே 50'000/= சம்பளம் பெறலாம். (C-112)



CIMS

அனுமதிகளுக்கு-0777-069-777



**LUXMY CONSTRUCTION**

எமது நிறுவனத்தினால் நீர்வேலிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டட வேலைக்கு அனுபவமுள்ள மேசன், கூலியாட்கள் உடன் தேவை. (C-363)

077 106 6112
077 179 1963



**வேலைவாய்ப்பு**

யாழ். நகரில் இயங்கும் வியாபார நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடங்கள் நிரப்ப அலுவலர்கள் தேவை.

01. நிர்வாக உதவியாளர் (ஆங்கில, சிங்கள பேச்சாற்றல்)
02. விற்பனையாளர்

தொடர்புகளுக்கு
077 499 4671 (4050)



**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS

UK- 1025 /=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-112)



**அமெரிக்க லொத்தர் விசா**

2020

நீங்களும் இந்த ஆண்டு அமெரிக்க லொத்தர் விசா அதிஸ்டாலி ஆகலாம்.

இறுதி நேர ஏமாற்றத்தினை தவிர்த்திட

உடனடியாக கடவுச்சீட்டினை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்

என்றும் உங்கள் மீது அக்கறையுடன் V2 TRAVELS

0768226244


# கூட்டணியின் பொதுச்சபையை உடனடியாக கூட்ட வேண்டும்

## கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபைக் கூட்டப்பட வேண்டும் என கூட்டணியின் உறுப்பினர்கள் 46 பேர் கையொப்பமிட்டு அக் கட்சியின் செயலாளர் நாயகமான வீ. ஆனந்தசங்கரியிடம் கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது பாராளுமன்றத் தேர்தலில் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவுகள் தொடர்பாகவும் தற்போது கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தொடர்பாகவும் உடனடியாக கலந்து ஆலோசிக்கவேண்டி இருப்பதனால் கட்சியின் பொதுச் சபையை இரண்டு வாரத்துக்குள் கூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-03)

# ஐ.நா தலையிடக் கூடாது- ஜனாதிபதி

(கொழும்பு)

நாட்டின் உள்விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் சபை தலையிடக்கூடாது என்றுதான் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

75ஆவது ஐக்கிய நாடுகள் சபை உயர் மட்டக் குழு கூட்டத்தில் காணொளி ஊடாக உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (ம-03)

**கண்ணீர் அஞ்சலி**



தோற்றம்
1969 - 11 - 18

மறைவு
2020 - 09 - 20

எமது பிரதேச செயலகத்தில்
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றிய

அமரர்
**பாலசிங்கம் பாலஸங்கர்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்திற்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும் உத்தியோகத்தர்களும்,
நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம்,
வலிகாமம் தெற்கு - உடுவில்

(4048)

**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**

**விசேட பொதுக்கூட்டம்**

காலம் :- 04.10.2020 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- காலை 10 மணி
இடம் :- பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்
கொக்குவில் இந்துக் கல்லூரி

கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள் :-

- வரைபு செய்யப்பட்ட யாப்பு தொடர்பாக ஆராய்தல்
- வருடாந்த பொதுக்கூட்டம் ஜனவரி 2021 இல் நடாத்தல்

யாப்பு நகலை www.khcosa.net இணையத்தளத்தில் பார்வையிடலாம்.
புதிதாக அங்கத்தவராக இணையவுள்ளவர்கள் செயலாளருடன்
077 608 0926 எனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு
அங்கத்தவராக இணைந்து கொள்ள முடியும்.

விசேட பொதுக்கூட்டத்திற்கு பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வி. தயாபரன்,
செயலாளர்

(C-362)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**பாலச்சந்திரன்**
**மதனரூபன்**

( பிரதி அதிபர் - கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயம் )

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் உடற்கல்வி
ஆசிரியராகக் கடமையாற்றி கடந்த
12.02.2020 முதல் கிளிநொச்சி
முழங்காவில் மகா வித்தியாலத்தில்
( தேசிய பாடசாலை ) பிரதி அதிபராகக்
கடமையைப் பொறுப்பேற்றிருக்கும்
சாவகச்சேரி இந்துவின் வெற்றி நாயகன்
**பாலச்சந்திரன் மதனரூபன்**
அவர்களின் சேவை மேலும்
சிறக்கப் பாராட்டி வாழ்த்துகிறோம்.




தென்மராட்சி
உடற்கல்வி ஆசிரிய நண்பர்கள்

(C-361)


CSE
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை

**முதலீட்டு ஆர்வலர்களுக்கான பயிற்சிப்பட்டறை யாழ்ப்பாணம்.**

**அறிவுபூர்வமான முதலீடு வளமான எதிர்காலம்**

கட்டணம் 1000/= (C-360)

செப்ரம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் கிளையில்

மேலதிக தகவல்களுக்கு: 0777105205 0212221455


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.